தமிழர் தகவல்

இலண்டன்

Tamils' Information

பிப்ரவரி 2006

மாத சோதிடம்
உள்ளே

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

32

A monthly information digest

இலண்டனில் தரமான தங்கத்திற்கு
Lakshmis Jewellers
276 High Street North London E12 6SA U.K
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

தமிழர் தகவல் Tamils' Information

பிப்ரவரி 2006 மலர் : 03 இதழ் : 32

'' பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.'' – குறள்

எண்ணப்படும் நாட்கள் !

கிழக்கு திமோர், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தோனேசியாவின் மாகாணமாக இருந்தது. அதன் சுதந்திரப் போராட்டங்கள் கொடுமையான இராணுவ அடக்கு முறையினால் அழிக்கப்பட்டதுமுண்டு, அமிழ்ந்துகிடந்ததுமுண்டு. அந்த மண்ணை ஆக்கிரமித்திருந்த இந்தோனேசியப் படைகள் புரிந்த அட்டகாசங்கள் அளவற்றவை. கொலைகள், கொள்ளைகள், குதறல்கள், கற்பழிப்புகள், கதறவைக்கும் சித்திரவகைகள் என்று எல்லை தாண்டியபோது ஐக்கிய நாடுகள்சபை அதில் தலையிட நேர்ந்தது. ஐ.நா ஆசியுடன் அதற்கான ஒரு தனி அரசப் பிரகடனமும் செய்யப்பட்டது. அதன்பின்னுங்கூட ஆக்கிரமிப்புப் படைகள் அங்கிருந்து முற்றாக அகன்றிடவில்லை. இன்றும் அச்சுறுத்தல் தொடர்கின்றது. ஐ.நா சபையும் அதன் ஆதிக்க வல்லரசும் அதுபற்றி அலட்டிக்கொண்டதாயில்லை. இந்த இழுபறிக்கு எவர் காரணம்?

சைப்பிரஸ், இரண்டு இனங்கள், இரண்டு மொழிகள் உள்ளடக்கியுள்ள நாடு. மக்காரியோஸ் பாதிரியாரின் தலைமையில் அது சுதந்திரபூமியாக எழுந்தபோது ஒற்றையாட்சியின் கீழ் இரட்டை இனங்களுக்கான – இணைவான தீர்வு ஒன்று உருவாக்கம் பெற்றது. அது ஒரு அதிசயமான அரசியல் பரவலாக்கல். 18% வீதமான துருக்கியர்களுக்கான துணை ஜனாதிபதிப் பதவி – அது ஜனாதிபதியின் அதிகாரங்களுடன் சரிசமமான அதிகாரங்களை அடக்கியிருந்தது. இரண்டுபேரில் எவர் முரண்பட்டாலும் சட்டம் உருவாக்கம் பெறாது – அது மக்கள் தீர்ப்புக்கே வழங்கப்படும். அங்குதான்வில்லங்கள் விலைக்கு வாங்கப்பட்டன. பரிதாபகரமான அரசியல் வீழ்ச்சிக்கு அயல்நாடான துருக்கியும் துணைபோனது. மீண்டும் முடிவற்ற மோதல்கள், பிரச்சினைகள் தீர்க்கப்படப் பேச்சு வார்த்தைகள் பலன் தந்தனவா ? தரவில்லையே ஏன்?

பாலஸ்தீனம், திணிக்கப்பட்ட தீர்வும், அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும், அங்கு அரங்கேறவே இல்லை. பாலஸஸ்தீனத்தின் விடிவெள்ளியான ' அரபாத் 'தையே அது பழிவாங்கிக் கொண்டு விட்டது. வல்லரசான அமெரிக்காவின் எடுபிடியாக இருந்த அன்றைய நோர்வே அரசின் பங்களிப்புடன் ஏற்படுத்தப்பட்ட ' எல்லைக்கோடுகளற்ற ' பாலஸ்தீனத்தில் இன்றும் இரத்தக் களரி நின்றுவிடவில்லை. நம் கண்முன்னதாக துன்பியல் வரலாற்றுத் தொடர் இது. தீர்வுக்கு வற்புறுத்திய ஏகாதிபத்தியமும் அதற்குத் துணைநின்ற நோர்வேயும் அதுபற்றிக் கண்டு கொண்டதே இல்லை. பாவப்பட்ட பாலஸ்தீனம் – அதன் பரிதவிப்பு யாருக்கும் புரியவில்லையா?

இவைகள் சமகாலத்தில் சரித்திரச் சான்றுகள் சாமர்த்தியமான நகர்வுகளே இன்று சங்கடங்களாகிவிட்டன. ஒரு உண்மையை இங்கு உரைத்திடல் வேண்டும். போராட்டத்தின் வெற்றிகளாகப் பெறப்பட்டிருந்தால் இவை ' பொய்ம்மான்சரடுகள் ' ஆக ஆகியிருக்கா.

இலங்கையில் தமிழர் தாயகம் இன்று வன்முறையுள் மூழ்கி மூச்சடைத்து நிற்கிறது. இராணுவத்தின் இரத்த வெறிக்கும் காம வெறிக்கும் களமாகியுள்ளது. ' சமாதானம் ' இதற்குச் சாமரை வீசுகின்றது. ஏகாதிபத்தியங்கள் இலங்கை அரச படைகளின் இழப்புகளுக்காகவே ஏங்குகின்றன. பாதிக்கப்பட்டு நிற்கும் தமிழனுக்காக பரிதாபப்படவில்லை. பதிலாக மிரட்டலும் உருட்டரும் விடுக்கப்படுகின்றன. அமெரிக்காவின் அரசதூதுவர் ' டிக்சிக் 'காக மாறி நிற்கிறார். அவர்கள் பயிற்றுவித்த ' கிறீன்பாட்ஸ் ' கரந்தடிப்படைகள் ' இத்தாவில் ' களத்தில் பந்தாடப்பட்ட பரிதாபம் இவர்களுக்கு இன்னுமா புரியவில்லை. ஆக இன்று...

பேச்சுவார்த்தைப் பற்றிய அக்கறை தமிழனுக்கில்லை. அந்த அவசரத் தேவை அரசுக்குத்தான் உண்டு. வேண்டப்படாத ' சொல்கெயிம் ' இன்றுவெற்றிலை வைத்து அழைக்கப்பட்டிருக்கிறார். அது மனதின் மாற்றமா? அல்லது உணர்வின் தடுமாற்றமா? அமெரிக்க வலைவிரிப்புக்குள் ஈழத்தமிழனை இழுத்துவிடும் இராஜதந்திரம் – இந்தியாவை ஏமாற்றும் செப்படிவித்தை எதுவுமே எடுபடப் போவதில்லை. 2006இல் இறுதிமுடிவு தெரிந்திட வேண்டுமென்பது தேசீயத் தலைவரின் மாவீரர் தின உரையின் வரையறை. பேராசிரியர் சுப.வீ அவர்கள் கூறியிருப்பதைப் போல '' போருக்கான நாளை சிங்களவர்கள் குறிக்கட்டும் வெற்றிக்கான நாளைத் தமிழர்கள் குறிப்பார்கள் '' என்று சொல்கிறோம், அவ்வளவுதான்.

– ஆசிரியர்

முகவரி :

41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval

படைப்புகள் ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்

நீக்கிலஸ் அவர்களின்
முதலாம் ஆண்டு நிறைவு
4.02.2006
அன்று கனடாவில்
அவர்களது இல்லத்தில்
நடைபெற்றது

ARS Tours

சிறந்த முறையில் ஆன்மிக சுற்றுலா ஏற்பாடு
செய்துத் தரப்படும்

10 நாட்கள்
7 நாட்கள்

அறுபடை வீடு
சிதம்பரம்
திருவண்ணாமலை
மதுரை மீனாட்சி கோயில்

சகல கோயில்களிலும் சிறப்பு தரிசனம்
ஏற்பாடு செய்து தரப்படும்
மலிந்த வாகன ஒழுங்கு
தங்குமிடம் வசதிகள்
செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு
91 44 24797123
சென்னை

STARR ESTATES LIMITED

ESTATE AGENS - VALUERS - SURVEYORS PROPERTY CONSULTANTS

Advice and assistance on purchase of investment abroad
including Europe, Middle East (Dubai) and Far East

Please call us with your requirements

ADVICE ON FINANCIAL SERVICES
PROVIDED BY QUALIFIED ADVISORS

- Sales
- Lettings
- Property Management
- Surveyors
- Valuations
- Mortgages
- Re-Mortgages
- Commercial Loans
- Buildings & Contents Insurance
- Life Insurance

CENTRAL PARADE
Station Road Harrow Middlesex HA1 2TW
Tel : 020 8427 5328
Mob : 07956 543 044 Fax : 020 8863 5705
Email : info@starrestatesltd.co.uk
Web : www.starrestatesltd.co.uk

கடுப்பும் கணக்கும்

" போர் மூலம் தீர்க்க இயலாத பிரச்சனையை போர் இல்லாமல் தீர்க்க இயலாத ஒரு நிலமைக்குத் தள்ளிவிட்டதில் பேரினவாதிகட்கு மட்டுமின்றி, இலங்கையின் குட்டையை குழப்பி மீன்பிடிக்க முயன்று ஓரளவு வெற்றியும் கண்ட அந்நிய சக்திகட்கும் பெரிய பங்கு உள்ளது. அதே சக்திகள், இன்று இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்குப் பேச்சு வார்த்தைகள் மூலமான தீர்வு ஒன்றை ஆதரிப்பதாகப் பேசிக்கொண்டு, தாங்கள் விரும்புகின்ற ஒரு ' சமாதானம் ' தவிர்ந்த வேறெந்தச் சமாதானமும் ஏற்படாதபடி கவனித்துக் கொள்ளுகின்றன.

அமைதிப்பேச்சு வார்த்தைகளின்போது விடுதலைப் புலிகளிடையே பிளவை ஏற்படுத்தியதில் யூ.என்.பி பிரமுகரான மிலிந்த மொரகொடவுக்கு ஒரு முக்கியப் பங்கு இருந்ததாகக் கூறப்படுகிறது. அவர் அமெரிக்க விசுவாசி. அவர் கையில் ஒரு அமெரிக்கக் கடவுச் சீட்டு உள்ளது. விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி, தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்துவதும், முறியடிப்பதும் யூ.என்.பியின் பேரினவாத அரசியல் மட்டுமல்ல. அது யூ.என்.பியின் எசமானனான அமெரிக்காவின் தேவையும்கூட. அமெரிக்காவுக்கு விசுவாசமான யூ.என்.பியை அதிகாரத்துக்குக் கொண்டுவர ஜனாதிபதித் தேர்தலின்போது அமெரிக்கா கடுமையாக முயன்றது. அதன் கணக்குப் பிழையாகிவிட்டது. எனவே அமெரிக்க அதிகார வர்க்கத்துக்கு கொஞ்சம் கடுப்பும் கூடியுள்ளது. "

– (மறுபக்கம் கோகர்ணன், தினக்குரல்)

கொலைகாரர் அரசியல்

" தேர்தலுக்கு முன்பே தற்போதைய ஜே.வி.பியினர் பற்றி கூறியிருக்கிறேன். சோமவன்ச அமரசிங்க, விமல் வீரவன்ச ரில்வின் சில்வா ஆகியோர் தமிழரைக் கொல்வதற்கென கங்கணம் கட்டி நின்கின்றனர். தமிழரைக் கொள்வதன் மூலம், நாட்டில் ஒரு இன வன்முறையை ஏற்படுத்திவிட்டு, ஜனாதிபதி மகிந்தவைக் கொன்றுவிட்டு ஆட்சிக்கு வருவதற்கே அவர்கள் முனைகின்றனர். இதுதான் உண்மை. இதை நான் சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். சோமவன்சவே எமது தலைவர் றோகண விஜேவீரவைக் காட்டிக் கொடுத்தவர். "

(டாக்டர் சந்திரா பொன்னாண்டோ – ரோகண விஜயவீரவின் மைத்துநர்)

உதவிக்கரம் நீளுமா ?

" தமிழீழம் என்ற ஆட்சி உருவாவதற்கு அல்லது மலர்வதற்கு, முன்பெல்லாம் தென்னாப்பிரிக்கா நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியே வந்துள்ளது. முந்நாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தற்போது மௌனமாகவே இருந்து வருகிறார். எப்படியாயினும் தென்னாப்பிரிக்கா இதற்கு ஆதரவு வழங்குமென்றே நம்புகிறேன். அந்த ஆதரவைப் பெறுவதற்கு உலகில் உள்ள தமிழர்கள் அனைவரும் தென்னாப்பிரிக்காவுடன் பேசவேண்டும் – தொடர்பு கொள்ள வேண்டும். அதைச் செய்தால் ஆதரவை உறுதிப் படுத்திக் கொள்ளலாம். "

(கலாநிதி இராசேந்திரன், தென்னாப்பிரிக்கா)

மறுப்பும் மனநிலையும்

" அயல்நாட்டு ஜனாதிபதியொருவரை மாநில முதல்வர் ஒருவர் சந்திக்க மறுத்திருப்பது இதுவே முதல் தடவையாகும். துணிவுடன் செயற்பட்ட தமிழ்நாட்டு முதலமைச்சர் பாராட்டப்பட வேண்டியவர். இதே வேளை சிங்களக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் வேட்டையாடப் படுவதற்குக் கண்டனம் தெரிவித்தும், கச்சத்தீவைத் திரும்பப் பெற வேண்டுமென்பதை வலியுறுத்தியும் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு ஜெயலலிதா கடிதம் எழுதி தனது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார். எனவே தமிழ்நாடு முதலமைச்சர் இவற்றுடன் மட்டும் நின்றுவிடாமல் சிங்கள இராணுவ வெறியாட்டத்துக்கு இரையாகிக் கதறும் ஈழத்தமிழர்களின் துயர்துடைக்கும் பணியிலும் அவர் ஈடுபடவேண்டும். மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் தனதுஆட்சிக்காலத்தில் ஈழத்தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு பல வழிகளிலும் உதவினார். ஈழத் தமிழர்களுக்கு காவலராக விளங்கினார். அவ்வழியே செயற்பட தமிழ்நாட்டு முதலமைச்சர் முன்வர வேண்டும். சர்வக் கட்சி கூட்டமொன்றினை உடனடியாகக் கூட்டி சிங்கள இராணுவ அட்டூழியங்களுக்கு இரையாகும் ஈழத்தமிழர் பிரச்சினை, சிங்களக் கடற்படைக்கு இரையாகும் தமிழக மீனவர் பிரச்சனை குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசை வலியுருத்த வேண்டும். "

(தலைவர் பழ. நெடுமாறன்)

மனமாற்றம் ?

ஆறுமுகன் கோஷ்டி வண்னிக்குப் போய் தமிழ்ச் செல்வனுடன் பேசிவிட்டு கொழும்பு திரும்பிய பின்னர் மலையக அரசியலிலும் சூடு ஏறிவிட்டது. புலிகளின் சகவாசக் காற்று அங்கு வீசுவதை அரசு விரும்பவில்லை. அதனால் ஆறுமுகனாரை அரசு தன் பக்கத்தோடு வைத்திருக்கவே விரும்புகிறது. அவரை மீண்டும் அரசில் வந்து இணையுமாறு ஜனாதிபதி கேட்டிருக்கிறார். ஆறுமுகம் தொண்டமானின் வோட்டு வங்கியை தம் பக்கம் இழுக்கத்தான் அரசு முயற்சிக்கிறது.

ஆனால் ஆறுமுகம் விழித்துக் கொண்டுவிட்டார். உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிந்ததும் அரசில் வந்து இணைந்து கொள்கிறேன். மலையக மக்கள் ஐ.தே.க.க்கு வாக்களித்துப் பழக்கப்பட்டுவிட்டனர். எனவே திடீரென மாற்றத்தைக் கொண்டுவருவது ஆரோக்கியமாக இருக்காது என்று சாக்குப் போக்குச் சொல்லியிருப்பதாகக் கேள்வி. இந்தத் திடீர் மாற்றங்களின் பின்னணியில் இந்தியத் தூதுவர் நிரூபமா ராவ் இருந்து செயலாற்றுவதாக கேள்வி

– சுடர் ஒளி, இலங்கை

பரட்சி எது ?

" புரட்சி என்றால் எரிமலை. புரட்சி என்றால் பூகம்பம். புரட்சி என்றால் தலைகீழ் மாற்றம். இப்படித்தான் நான் படித்திருக்கிறேன். ஆனால் சிரில் மாதியூ என்கின்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தினுடைய பேராசிரியர் புரட்சி என்பதற்கு ஒரு விளக்கம் தருகிறார். அயர்ந்து போனேன் அந்த விளக்கம் கேட்டு

புரட்சி என்றால் என்ன? தமிழ்நாட்டிலே ஈரோட்டிலே பிறந்த ஈ.வே.ராமசாமி அவர்களுடைய வாழ்க்கை வரலாறுதான். சொல்லுபவன் யார்? ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தினுடைய பேராசிரியர் விருப்பு வெறுப்பு இன்றி உலகச் சிந்தனையாளர்கள் பற்றி புத்தகங்களையெல்லாம் ஆய்வு செய்துவிட்டு அவன் சொல்லுகிறான். அப்படிப்பட்ட பெரியார் பிறந்த மண்ணில் அண்ணன் பழ. நெடுமாறன் பேசமுடியவில்லை. தமிழ் முழக்கம் சாகுல் ஹமீது முழங்க முடியவில்லை. பேராசிரியர் சுப.வீ பேச முடியவில்லை. அவர்கள் பேச முடியாத ஒவ்வொரு நாளும் இந்த மண்ணுக்குப் பூட்டப்பட்ட விலங்காகவே நான் கருதுகிறேன். இந்த விலங்குகள் உடைக்கப்பட வேண்டும் என விரும்புகிறேன். "

– (வை. கோ. பேச்சிலிருந்து)

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

Prime Food & Wine

News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables

மளங்கவரும் மளிகைச்சாமான்கள், மென்பானங்கள்,
மதுபான வகைகள், பழங்கள்,
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி
என எல்லாவற்றிற்கும்
குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப்
பெற எம்மை நாடுங்கள்

118, Tooting High Street
London SW 17 0RR
Tel : 020 8682 3777

வோல்த்தம்ஸ்ரோவில்

Kumarans
குமரன்ஸ்
TEXTILES

136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444
020 8530 3033
Fax : 020 8521 9444

இவர்களின் விளம்பரத்தை

ttn IBC
வானொலி

தொலைக்காட்சியில்
கேளுங்கள்

New Mot Station Open !

CAPITAL AUTOS LTD.

51A Milton Avenue East Ham London E6 18G
Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147www.capitalauto.com

- Fully equipped M.O.T. & accident repair centre
- Insurance repairs welcome
- Recovery Service
- Approved insurance repairs
- Courtesy vehicle available For most repairs
- Professional friendly service and advice
- Collection & deliver within the local area

Accident Repair Centre & General Services & Repairs to all Makes and Models

BMW MERCEDES
VAUXHALL
HONDA
VOLKSWAGEN
NISSAN Ford

இலண்டனில்
எந்த இடத்தில் இருந்தாலும்
உங்கள் வாகனத்
திருத்த வேலைகளுக்கு
நீங்கள் செல்ல வேண்டிய இடம்

Reg : _____
Model : _____
Name : _____
Tel : _____

Hurry - Limited Offer !

£ 10 OFF
Your M.O.T!

BASED ON CURRENT M.O.T.FEE OF £42.10
• OUR VOUCHER PER CAR ONLY

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

உயிர் குடித்த நிமிடம் !

" ஒரு நிமிடம்
கடல் எழுந்து
மறு நிமிடம் விழுந்தது
எங்கள் ஊரழகும்
உறவழகும்
ஒரு கொடியில் அழிந்தது "

– பாவலர் அறிவுமதி

ஆடுகளற்ற உலகம் !

ஆடுகளின் அழகும் குறும்பும்
ஆயிரமாயிரம்

அம்மாவிடமும் இருந்தன
ஆடுகள் பற்றிய
பலநூறு கதைகள்

எங்கள் ஊரில் இப்போது
பற்றைகளில்லை
ஆடுகளுமில்லை
நாங்களுமில்லை

தரிசாக்கப்பட்ட பெரு வெளியில்
நிறைத்திருக்கின்றன
மிதிவெடிகள்

மிதிவெடிதான் தின்றது
அம்மாவையும் !

– கவிஞர் கருணாகரன்,
ஈழம்

மதிப்பீடு !

எழுதிக் கொண்டிருந்தான்
விமர்சனங்கள் வந்தன
எழுதாமல் இருந்தான்
விருதுகள் வந்தன

கால் நடைக்குத் தெரியுமா
கவிதை நடை...?

–கவிஞர் மு. மேத்தா

உறுத்தல் !

இரவெல்லாம்
விழித்திருந்து
எங்களூர் ஆச்சி
இழைத்த
பனைப்பாய்...
வாங்கினேன்,
உறங்குவது
எப்படி
இவள்
பாயில்?

–கவிஞர் காசி ஆனந்தன்

வரவேற்பரை !

கதவு திறந்ததும்
காற்றின் விரல்பட்டுச்
சிணுங்கும்
அந்தரத்தில் தொங்கும்
அழைப்பு மணி

பண மூட்டைகளைச்
சுமக்கும் குபேரர்
பக்கத்திலேயே
சிரிக்கும் புத்தர்

கண்ணாடித் தொட்டியில்
தங்க மீன்களின்
விளையாடல்

வீட்டின் முன்னால்
ஒரே கூட்டம்

ஏலம் விட்டது
நீதிமன்றம் !

– கவிஞர் பழனிபாரதி

மூடுக !

" இருட்சாதித் தத்துவச்
சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன் செவியில்
எருவாக்கில் போட்டு
மருட்சாதி சமயங்கள்
மதங்க ளாச்சிரம
வழக்கெல்லாம் குழிவெட்டி
மண்மூடிப் போக ! "

– வள்ளலார் சுவாமிகள்

மகிழும் கடவுள்

" நடமாடும் கோயில்கட்கே
நாமொன்று தந்தால் – இரங்கி
நலமொன்று புரிந்தால் – அதுதான்
உடனே போய்ப் பரமனுக்கே
உவப்பைச் செய்யுமப்பா – பெரியார்
உரைத்ததும் தப்பா ? "

– பாவேந்தர் பாரதிதாசன்



மாதமிரு திருக்குறள் கற்போம்

கல்லாமை

கல்லா வொருவன்றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும் (குறள் : 405)

கல்லாத ஒருவன் தானும் அறிவுடையான் போலத் தன்னை எண்ணிக்கொள்ளும் மதிக்கற்பாடு கற்ற ஒருவனை அணுகி உரையாடத் தொடங்கியதும் நிலைநிற்க மாட்டாது கெட்டுப்போகும்.

உளரென்று மாத்திரைப வல்லார் பயவாக்
காரணையர் கல்லாதவர் (குறள் : 406)

கல்லாதவர் உயிருடன் உள்ளனர் என்பதொன்று மட்டுமல்லாமல் எதுவும் விளையாத கார்நிலம் போலத் தமக்கும் உலகிற்கும் பயன்பட மாட்டார்கள்.

இயக்குநர் சேரனின் தவமாய் தவமிருந்து...

இதுவரை ' தமிழர் தகவல் ' தன்னுள் அடக்கியிருக்காத ஒரு விடயமாக சினிமா இருந்திருக்கிறது. இன்று அந்த இறுக்கத்தை உடைத்துக் கொண்டு வெளிக்கிளம்பும் முளையாக முகிழும் விடயம் சேரனுக்கானது. காலத்தின் தேவையாக, கலாச்சாரத்தின் பிரதி பலிப்பாக, மண்ணின் பாரம்பரிய மணமாக வெளிவந்திருக்கும் சேரன் அவர்களின் படைப்பை, அது ' தவமாய் தவம் இருந்து ' என பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இது என் மனத்தாழத்தின் திருப்தி.

திரைப்படமாகும் ஒரு கதையின் வெற்றிக்கு பல காரணிகள் உண்டு. அந்த மாபெரும் வெற்றிக்கு இங்கு ஒரு கூட்டு இணைப்பே காரணம். ஏனெனில் இதில் எந்தப் பாத்திரமும் சோடை போகவில்லை. நடிப்பின் துடிப்பும், பாத்திரவார்ப்பும் பரிமளிக்கும் ஒரு படைப்பு இது. " உனக்கும் ஏதாவது குறை வைத்தேனா ? " இந்தக் கேள்வி அரங்கைவிட்டு வெளியேறிவிட்ட பின்னும் நம்மை ஆட்டிப் படைக்கிறது. அந்த அப்பா ! ... நினைக்க நெஞ்சு நெகிழ்ந்து போகிறது. அதை விவரிக்கவே வார்த்தைகள் வரவில்லை. குழந்தையின் மேல் பணக்கட்டை வைத்துவிட்டு திரும்பும் தந்தை, புறப்பட்டுப் போக முயலும்போது, மறிக்கவும் முடியாமல், தவிர்க்கவும் முடியாமல், கேட்கவும் குரலின்றி விம்முகின்ற இதயமும், வெடிக்கும் அழுகையுமாக அந்தப் பெரிய குழந்தை – சேரன்; என்ன ஆற்றலுள்ள ஆழமான நடிப்பு. சொற்களுக்கு அப்பால் சோகம் மண்டி நிற்கிறதே ! அந்தப் பெரிய குழந்தை அப்பாவின் மடியில் முகம் புதைத்து குமுறுகின்ற போது என் பக்கத்திலிருந்து ஒரு விசும்பல் ஒலி கேட்கிறது. திரும்பிப் பார்க்கிறேன் அங்கு அமர்ந்திருந்த என் நண்பன் " என்ர அப்பா இப்படித்தான் – இப்படித்தாண்டா " என்று புலம்புகிறான். இப்படி ஒரு பார்வையாளனையே வாய் விட்டு அழவைத்தபோதே சேரனுக்காக இது எழுத வேண்டுமென்று தீர்மானித்தேன். இது சேரனின் திறமையைக் காட்டிய ஒரு காட்சி என்பேன். நன்றி உணர்வும் கூட.

மனைவியுடனும், குழந்தையுடனும் தன் வாசலில வந்து நிற்கும் மைந்தனை; வாடா ! என அழைக்கவரும் வார்த்தையை தன் நெஞ்சினுள்ளே அமுத்திக் கொண்டு, தன் மனைவியின் ஒப்புதலுக்காக அவள் முகத்தினை வட்டமிடும் அந்த தந்தையின் பார்வை ... அந்தத் தாம்பத்யத்தின் தூய்மையை, விசுவாசத்தை, இணைவை, தவிப்பை தன் நெஞ்சுக்குள்ளே சுமக்கும் குடும்ப பாசத்தை; எப்படி ஜமாய்க்கிறார் ராஜ்கிரண். அற்புதமான அடக்கமாக வெளிப்பாடு அது. " இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன்... " என்று வள்ளுவம் சொல்லுவது இதைத்தானோ ? வியப்பின் விளிம்பில் நிற்கிறோம்.

அந்த இளசுகளின் இணைவு, துன்பகரமான ஒரு அறையுள் அடங்கிய குடித்தனம், அதன் பின்னான வாழ்வின் உயர்வான மாற்றங்கள், இரண்டிலும் அந்த உறவு சமமாகக் காட்டப்பட்டிருக்கிறது. பெண்மையை ஆண்மையும், ஆண்மையை பெண்மையும் புரிந்து கொண்டதான அந்த வாழ்வு நிலை இது வரை வந்த எந்த தமிழ்த் திரையிலும் இவ்வளவு அழகாகவும், ஆழமாகவும் சித்தரிக்கப்படவில்லை. வாழ்வின் ஆரம்ப கால ஏமாற்றங்கள் – இடைக்கால மாற்றங்கள் எதிலும் அவர்கள் பாதிப்படையவே இல்லை. அதுதான் பேரறிஞர் – சிந்தனையாளன் கார்லமார்க் – ஜென்னி வாழ்ந்து காட்டிய வாழ்வு. இன்றைய தலைமுறைக்கு இது கட்டாய பாடம்.

தன் வறுமையையும் இயலாமையையும் தனக்குள்ளே புதைத்துக் கொண்டு, தன் குழந்தைகளுக்கு அது தெரியாமல் அவர்கள் தேவையைத் திருப்திப் படுத்தும் அந்த தந்தை, அந்த தந்தைக்கேற்ற தாரம் – அவள் குடும்பத்துக்காகவே உழைக்கும் உன்னதம் – தன் மருமகள் மேல் இயல்பான கோபத்தைக் காட்டும் பாங்கு, அந்த வித்தியாசமான வெளிப்பாடு சரண்யாவுக்குத் தாராளமாய் வருகிறது. தன் மகனை உள்ளே அனுமதிக்க மறுக்கும் இறுக்கம், தன் முன்னால் கிடந்து அழும் பேரக்குழந்தையின் வீரிட்டழும் செயலால் எப்படி கரைந்து போகிறது என்பதை அந்தத் தாயின் பரிதவிப்பும், பாவமும் காட்டுகின்றன. இது ' சரண்யா 'தானா ? வியந்து போகிறோம்.

அந்த அன்புருவான அன்னை உள்ளம் எவ்வித அலட்டலுமின்றிப் படுக்கையில் அமைதியாக அணைந்து போகிறது. அங்கு மூன்று இதயங்கள் (கணவன், மகன், மருமகள்) அந்தக் கட்டிலைச் சுற்றி நிற்கின்றனர். கத்துதலின்றி, குளறுதலின்றி – கட்டிப்பிடித்து ஒப்பாரி வைத்தலுமின்றி அந்த மூன்று பேரும் முகங்களிலே முடிவற்ற சோகங்காட்டி வேதனையை வெளிப்படுத்தும் விம்முதல் எழ நிற்கும் காட்சி கூட மாறுபட்ட புரட்சிதான். அந்த இயற்கையான பிரிவு புதிய பரிமாணத்துடன் காட்டப்பட்டிருக்கிறது.

அந்த சிறிய அச்சுக்கூடம். அந்த அச்சகத்தின் உரிமையாளரான அந்த அப்பா – அவருக்கு உதவியாக ஒரு ஊழியன்– இந்த அப்பாவின் குடும்பத்தில் அந்த ஊழியன் காட்டும் பரிவும், பாசமும், அந்த ஊழியனிடம், அந்த அப்பா முதலாளி செலுத்தும் கருணை, தன் குழந்தைகளின் தேவையைவிட அவனின் தேவையை முன்னிறுத்தி வெகு நாசுக்காக அவனுக்கு அவர் அளிக்கும் பணம், அவர் நிலையைப் புரிந்து கொண்டு அதன் பெரும் பகுதியை அவர் குழந்தைகளுக்காக அவன் திருப்பித் தரும் வறுமையுள் செம்மை எவ்வளவு ஆழமானதும், ஆளுமையானதுமான வெளிக்கொணர்வு. ஒரு முதலாளிக்கும் ஊழியனுக்கு மிடையேலான அந்தப் பிணைப்பு – இறுக்கம் – விசுவாசம் மெய்சிலிர்க்க உணர்த்தப்படுகிறது. இந்த உறவுக்குப் பெயர்தான் என்ன ? ' ரிதம் ' என்பதா ? ' அறம் ' என்பதா ?

மறைந்த பின்பும் தன் மனைவியின் நினைவுகளுடன் கிராமத்தில் வாழும் அப்பா – ஒரு தாஜ்மகாலையே தன்னுள் உருவாக்கி நிற்பது போல் காட்டப்பட்டிருக்கிறது. கிராமத்திய

இல்லறத்தின் சிறப்பு இயல்பாகவே வெளிக்கொணரப் பட்டிருக்கிறது. இப்படி இன்னும் நீட்டிக் கொண்டே போகலாம். நீங்களும் பார்க்கட்டுமே என்று விட்டுவிடுகிறேன்.

சேரனின் இத்திரைப்படத்தில் தேடிப்பார்த்தேன். வில்லன்கள் இல்லை, வேடிக்கை வசனங்கள் இல்லை. பண்பாட்டுக்கு முரணான காதல் கட்டியணைப்புகள் இல்லை. கற்பழிப்புகள் இல்லை, அடிதடி சண்டைகள் இல்லை, சதிகளும் இல்லை, கொலைகளுமில்லை. ஒப்புக்காகவாவது ஒரு கலகலப்பு கூட இல்லை. எப்படி சேரன் இப்படி ஒரு தமிழ்ப்படம் எடுக்கத் துணிந்தார் ? எனினும் அந்தத் துணிவு என்ற ' இடர்வரவு ' அவருக்கு ஒரு இருக்கையை உண்டாக்கிவிட்டிருக்கிறது. மக்கள் மனதுள் மாறாத மதிப்பை மலர்த்தியிருக்கிறது. இது ஒரு புதிய சகாப்தத்தின் நுழைவு. புகழப்படவேண்டிய மதி நுட்பம். பாராட்டப்பட வேண்டிய பரிமாணம் எனலாம்.

' பாண்டவர் பூமி 'யில் பார்த்த அடக்கம், ' நந்தா 'வில் காட்டிய ' கம்பீரம் ' இவைகளை விஞ்சி ' ராஜ்கிரணை ' ஒரு நட்சத்திர உயர் விருதுக்கு நகர்த்தியிருக்கிறது இந்தத் திரை. இத்தனை நாட்கள் இந்தச் சரண்யா ஏன் மறைந்திருந்தார் ? என்று கேட்கத் தோன்றுகிறது. அந்தப் பாடசாலை நாட்களில் சேரனுடன் குலவும் அந்தச் சிட்டு என்னமாய் சிறகடிக்கிறார். அச்சகத் தொழிலாளி கூட அசத்தியிருக்கிறாரே.

எல்லாம் வல்ல சேரன்; தன் கதாநாயகன் பாத்திரத்தை இரண்டாம் இடத்துக்கு தள்ளிவிட்டி அப்பா 'ராஜ்கிரணை ' முதலாவது இடத்துக்கு முன் நகர்த்தியிருக்கிறாரே இதை எப்படி பாராட்டுவது ?

தமிழ் மண்ணுக்கும், தமிழ் சினிமா துறைக்கும் சமகால சிந்தனைகட்கும் வழிகாட்டும் இயக்குநர் சேரன் என்ற சிந்தனையாளனை நன்றியுடன் நாவினிக்கப் பாராட்டுகிறோம். இது காலத்தின் தேவை.

– அரவிந்தன்

லதா தமிழ் களஞ்சியம்

SRI LANKAN, ENGLISH & CARRIBEAN FOODS
AUDIO, VIDEO, TEXTILES & TRAVEL TICKETS

எம்மிடம் தினமும் இலங்கை, இந்திய பசுமையான மரக்கறி வகைகள், பழ வகைகள், அனைத்து ரக அரிசி வகைகள், கடலுணவுப் பொருட்கள்

சனி – ஞாயிறுகளில் உடன் பங்கு ஆட்டிறைச்சி

சமையலுக்கும் தேவையான பல வகைப் பாத்திரங்கள், சுவாமிப்படங்கள், கோவிலுக்குத் தேவையானப் பொருட்கள்

முன்னணி எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுவர்களுக்கான ஆரம்பப் புத்தகங்கள், தமிழ் – சிங்கள சஞ்சிகைகள்.

தொலைபேசி அட்டைகள், தமிழ், ஹிந்தி, சிங்கள, ஆங்கிலத் திரைப்படங்கள்

DVD, VCDs, AUDIO, CDகளை வாடகைக்கும் விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்

30 LOAMPIT HILL, LEWISHAM, LONDON SE13 7SW

TEL : 020 8265 0629

LATHA SUPER COMPLEX

எனக்கு வேண்டப்பட்ட ஒரு நண்பர். எப்பொழுது பார்த்தாலும் அவர் முகம் உம்மென்று இருக்கும்.

எந்த நேரமும் மன இறுக்கத்திலேயே இருப்பார்.

'' எதுக்காக இப்படி இருக்கீங்க? '' என்று கேட்டால்

'' நான் எதிர்பார்க்கறது மாதிரி மத்தவங்க நடந்துக்க மாட்டேங்கறாங்க... '' என்பார்.

இப்படிப்பட்ட மன இறுக்க ஆசாமிகள் வாழ்க்கையில் வெற்றி பெறுவது மிகவும் கடினம்.

இறுதி வரை இவர்கள் இறுக்கமாகவே வாழ்ந்து, இறுக்கமாகவே போய்ச் சேர்ந்து விடுவார்கள்.

இவர் நினைக்கிற மாதிரி அடுத்தவர்கள் நடந்து கொள்வதில்லை என்பது இவர் குறை.

அடுத்தவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரோ அது மாதிரி இவர் முதலில் அவர்களிடம் நடந்து காட்ட வேண்டும்.

வெற்றிக்கான ரகசியங்களில் இதுவும் ஒன்று.

இதுபற்றி நிபுணர்கள் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

வெற்றி காண நிரூபிக்கப்பட்ட வழிமுறைகள் இவ்வளவுதான் என்று ஒரு சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

அவற்றில் ஒன்றிரண்டை நாம் தெரிந்து வைத்துக் கொள்ளலாம். வெற்றிச் சிறகுகள் விரிய அவை உதவும்.

நாம் செய்ய விரும்புகின்ற காரியங்களில் மற்றவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று நாம் ஆசைப்பட்டால்... முதலில் அவர்கள் விரும்புகிற காரியங்களில் நாம் ஒத்துழைக்க வேண்டும்.

முற்றிலும் அறிமுகமில்லாத ஒருவர்.

அவருடன் பேசவேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். முதலில் நாம் அந்த உரையாடலை ஆரம்பித்து வைக்க வேண்டும்.

நம்மை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தால்,

மற்றவர்கள் ஏற்றுக் கொள்கிற வகையில் நம்மை முதலில் மாற்றிக் கொள்ள வேண்டும்.

நாம் எந்த இடத்திலாவது நீடித்திருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், நடைமுறையிலே உள்ள சுற்றுச் சூழலுக்கு தகுந்த மாதிரி முதலில் நம்மை சரிசெய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு சுற்றுச்சூழலை மேம்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது... அதில் வெற்றிகரமாக முன்னேறுவது எப்படி?

சாத்தியமான பல அம்சங்களை உற்சாகத்தோடு நாம் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இயற்கையில் விதி என்ன சொல்கிறது தெரியுமா?

நீ எதை ஏராளமாக அறுவடை செய்ய விரும்புகிறாயோ.. அதை முதலில் நீ விதைக்க வேண்டும்.

இதுதான் இயற்கை நமக்குச் சொல்லித் தந்திருக்கிற விதி.

உங்களுக்கு வலிமையும் நிதானமும் வேண்டுமா...? அப்படிப்பட்டவராக உங்களை ஆக்கிக் கொள்ள விருப்பமா?

அப்படியானால்,

நீங்கள் தொல்லைகளையும் பிரச்சினைகளையும் பார்த்து உணர்ச்சிவசப்படக் கூடாது.

அதாவது,

தொல்லைகளை உணர்ச்சியின் வடிவங்களாக ஆக்கிவிடக் கூடாது. நாம் நாள்தோறும் பல மனிதர்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

அவர்களில் சிலர் சுயநலவாதிகளா இருக்கலாம். தற்பெருமைக்காரர்களாக இருக்கலாம். நன்றி கெட்டவர்களாகக்கூட இருக்கலாம்.

இவர்களைச் சந்திக்கிற போது, பேசுகிறபோது நம் மனநிலை பாதிக்காமல் பார்த்து கொள்வது எப்படி? நமக்கு எரிச்சல் வராமல் பார்த்துக் கொள்வது எப்படி?

இதற்கு என்ன வழி என்றால்...

முதலில் யாருமே பரிசுத்தமானவர்கள் இல்லை என்கிற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதையெல்லாம் சகித்துக் கொள்கிற பக்குவத்தை ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.

மனித இயல்புகளில் உள்ள இந்தக் குறை பாடுகளைப் பார்த்து நாம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது.

வாழ்க்கை என்பதே மிகவும் சுருக்கமானது. ஏற்கனவே அதிலே தொல்லைகள் உண்டு.

அப்படி இருக்கிறபோது அதோடு கூடப் பகை, வெறுப்பு, கோபம் அவற்றையெல்லாம் சேர்த்துக் கொண்டு, இருக்கிற தொல்லைகளை இன்னமும் அதிகமாக்கிக் கொண்டிருக்கக் கூடாது.

பிரபலமாவதற்கும், வெற்றியைத் தொடுவதற்கும் மகிழ்ச்சியோடு இருப்பதற்கும் மூன்று கருத்துகள் மிகவும் முக்கியம்.

அதாவது நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்து

நன்றி சொல்லுங்கள்

நல்லெண்ணத்தைக் காட்டுங்கள்

நல்வாழ்த்துக் கூறுங்கள்

தோல்விகளிலேயிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

தோல்வி என்பது இழிவு அல்ல... அது பாடம்.

ஒருத்தர் தன்னுடைய நண்பரைப் பார்ப்பதற்காக ஆர்வத்தோடு புறப்பட்டுப் போனார்.

ஒரே மழை... சேறு... சகதி... தரையிலே கால் வைத்தால் வழுக்கி வழுக்கி விடுகிற நிலைமை !

எப்படியோ ஒரு மாதிரியாகப் போய்ச் சேர்ந்து விட்டார்.

அங்கே போய்ச் சேர்ந்ததும் சொன்னார்.

'' இங்கே வந்து சேர்றதுக்குள்ளே படாதபாடு பட்டு விட்டேன்... ஒரு அடி முன்னேறினால் நாலு அடி பின்னாடி சறுக்கி விட்டுடுது. ''

நண்பருக்கு ஆச்சரியம்.

'' அது எப்படிங்க... ஒரு அடி முன்னேறினால் நாலு அடி பின்னாடி சறுக்கிவிட்டுதுங்கறீங்க... அப்புறம் எப்படி இங்கே வந்து சேர்ந்தீங்க? ''

'' அது ஒண்ணும் இல்லீங்க... நான் உடனே திரும்பி நின்னு எங்க வீட்டுக்குப் போக முயற்சி பண்ணினேன்... அதனாலே இங்கே வந்து சேர்ந்துட்டேன்...! ''

அதிர்ச்சியான பதில் காத்திருக்கிறது

புலிகளின் முக்கியஸ்தர் பாலகுமாரன் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இலங்கை வருகை தந்துள்ள நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சந்திக்கும்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிர்ச்சியான பதில் காத்திருக்கிறது என்று விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்த பாலகுமாரன் மேலும் கூறியதாவது,

கொழும்பில் சில நாட்களாக நடைபெற்று வருகின்ற திடீர் திருப்பங்கள், தலைகீழான மாற்றங்கள் சுருக்கமாக சொல்வதானால் கழுகு ஒன்று புறாவாக மாறியமை, மெல்ல மெல்ல கருக்கொண்டு வரும் அரசியல் சதி ஆகியவைப் பற்றி பேசுவோம்.

கொழும்பு அரசியலில் திடீரென்று அமைதிக் கொடி – வெள்ளைக் கொடியாக கொடிக் கட்டி பறக்கிறது. மகிந்த தனது அரசியல் மாளிகையில் இராப்பகலாக தந்திரங்களைத் திட்டமிட்டு மாநாடுகளைக் கூட்டி வருகிறார்.

இப்படி திடீரென்று மகிந்தக் குட்டிக் கரணமடிப்பதற்குக் காரணம் என்னவெனில், அதுதான் எங்கள் பலம்.

அண்மைக் காலமாக இங்கே நடந்து வருகிற மக்களினதும் எழுச்சி, அதனது விளைவு, மக்கள் படையணியாகத் திரளக் கூடியச் சூழல், மக்கள் பயிற்சி பெறுகிற தோற்றப்பாடு என்கிற எமது இராணுவ பலத்தினது விளைவாக மகிந்த திக்குமுக்காடி சதித் திட்டங்களை வகுக்கிறார்.

ஆகவே, எங்கள் மக்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இன்று அமைதி முயற்சிகள் தொடர்பான மகிந்தரின் அனைத்துக் கூப்பாடுகளும் எங்களுடைய இராணுவ பலத்தின் வெளிப்பாட்டில்தான் உருவானதே தவிர வேறு ஒன்றும் அல்ல.

இந்தச் செய்திகளுக்கு ஊடாக எங்களுக்குக் கிடைக்கக் கூடிய முடிவுகள் எவையெனில்,

முதலாவது - 15 கட்சிகளை அழைத்து மகிந்த பேசுவதற்கு முன்பாக ஜே.வி.பி. ஜாதிக ஹெல உறுமயவுடன் மகிந்த நீண்ட கலந்துரையாடலை நடத்தி சதித்திட்டத்தை வகுத்திருக்கிறார்.

அதாவது - '' இப்பொழுது நீங்கள் அமைதியாக இருங்கள். புலிகளை அழிப்பதற்கான இன்னொரு வழியிலே நான் செயல்பட போகிறேன். ஆகையால் சிறிது காலத்திற்கு அமைதியாக இருங்கள். மீண்டும் அமைதிப் பொறிக்குள் புலிகளைச் சிக்க வைக்கும் முயற்சியை எடுக்கப்போகிறேன் '' என்ற கருத்தை தெரிவித்து, '' வெளியில் நீங்கள் கூப்பாடு போடுங்கள். உள்ளுக்குள் எனக்கு ஆதரவாக இருங்கள் '' என்றும் மகிந்த கூறியிருக்கிறார்.

அதுபோல் - சிங்கள ஊடகத்தாரைக் கூப்பிட்டு, அவர்களுக்கும் தனது உண்மையான உள்நோக்கத்தை விளக்கி, தனக்கு ஒத்துழையுங்கள் என்று கேட்டுவிட்டு வெளியில் சமாதானம், புதிய முயற்சி, அர்ப்பணிப்பு என்று பலவாறான சொற்களை மகிந்த பயன்படுத்துகிறார். எங்களுக்கு மகிந்தரது உண்மையான தந்திரம், நோக்கம் எதுவென்பது தெளிவாகப் புரிந்து விட்டது.

இந்தச் சூழலில் அமைதிக்காகப் பாடுபடும் சர்வதேசத்தின் முயற்சிகளை நாங்கள் புறம் தள்ளாது. நோர்வேயினுடைய சிறப்புத் தூதுவர் வருகையைத் தடுக்காமல், அவரது முயற்சிக்கூடாக அமைதியாக செயற்படத் தயாராக இருக்கிறோம் என்பதை மீண்டும் உலகத்துக்கு தெரியப்படுத்துவதற்காக தலைவர் பிரபாகரன் சந்திக்க உள்ளார்.

தலைவருடனான சந்திப்புகள் அனைத்துமே மிக மிக முக்கியமானவை.

எமது தேசத்தின் குரலாக எமது நிலைப்பாட்டைச் சொல்வதற்காக நாங்கள் சந்திக்கிறோமே தவிர வேறொன்றும் இல்லை.

அதேபோல் நாங்கள் நினைப்பது போல் இல்லாமல் உண்மையான ஒரு அமைதி முயற்சியை முன்னெடுப்பதற்கான திட்டங்களை அவர்கள் முன் வைத்திருந்தால் அதை நாங்கள் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்பது எப்போதும் எங்களுடைய நிலைப்பாடு.

இந்தப் போர் நிறுத்தச் சீர்குலைவுக்கு யார் காரணம் என்பது இந்த உலகத்துக்கு மிக மிகத் தெளிவாகத் தெரிகிறது.

மகிந்த ராஜபக்ஷவின் குட்டிக் கரணத்துக்கு இதுவும் ஒரு பிரதானக் காரணம் என்பது இந்த உலகத்துக்கு மிக மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஆகவே, இந்த முறை போர் நிறுத்தம் பற்றித்தான் பேச வேண்டும் என்ற சிங்களத் தரப்பு சொல்கிற போது அந்த சதி எங்களுக்கு நன்றாகப் புரிகிறது.

மக்களினது அமைதிக்காக இந்த முயற்சிகளில் நாங்கள் ஈடுபடுகிறோம்.

இந்தக் குழப்பத்துக்கு யார் காரணம் என்பது உலகத்துக்கு மிக நன்றாகத் தெரியும்.

அமைதி முயற்சியாக இருந்தாலும் சரி, போராக இருந்தாலும் சரி. எங்களுடைய தேசம் ஒரு போர்க்கோலம் பூண்டு மிகவும் பலத்துடனும் ஆயத்தங்களுடனும் இருந்தால்தான் நாங்கள் எதனையும் வெல்ல முடியும்.

இதனுடைய அடிப்படையில் நடக்கக்கூடிய பேச்சுகளும் போர்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவைதான்.

வியட்நாமிலேஒரு பழமொழி இருக்கிறது.

பேச்சும் போருமாக போராட்டம் நடக்கும் ;

பேசுங்கள் - போரிடுங்கள்

போரிடுங்கள் - பேசுங்கள்

பேசுங்கள் - போரிடுங்கள் என்று போரிடுங்கள் என்று இறுதியிலே முடியும்.

ஆகவே எங்களுடைய பேச்சுகள் யாவும் அதன் நீட்சியாக போரிலே சென்று முடியும்.

படிப்படியான பரிணாம ரீதியான செயற்பாடுகளூடே நகர்கிறோம்.

அண்மையிலே வரக்கூடியஇந்தப் பேச்சுகள், அதனது வெளிப்பாடுகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே மகிந்த ஏன் போர் நிறுத்தம் பற்றிப் பேச வருகிறார் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவருடைய வழியிலேயே சென்று அவர் எதிர்பார்க்காத மிகவும் அதிர்ச்சியடையப் போகிற பதிலைச் சொல்லத் தலைவர் தயாராகி வருகிறார் என்பது உங்களுக்குத் தெரியும்.

தலைவரது அண்மைக் கால செயற்பாட்டுக்கு ஊடாக, அவரது நிலையை மிகவும் மதிப்போடும் வியப்போடும் பார்க்க வேண்டிய கட்டாயம் இன்றைக்கு அனைத்துத் தலைவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

நன்றி : தினக்குரல்

ஒருமுறை சிவராத்திரி விரதமிருந்தால், 100 ஏகாதசி தின விரதம் இருந்த பலன் கிட்டும். சிவராத்திரி விரதத்தினை அனுஷ்டித்து, மகேசனருளால், மங்களங்கள் யாவும் பெறுங்கள். இந்த ஆண்டு சிவராத்திரி (26.02.2006).

மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி தினத்தில், நள்ளிரவு பதினான்கு நாழிகையில் சிவ வழிபாடு செய்வது, கோடி பிரம்மஹத்தி தோஷங்களைக் கூட போக்குமளவு புனிதமானது. அன்றைய தினமே சிவராத்திரி.

ஒரு விடியலைத் தேடி...

– ச. முருகானந்தம்

பூரணை நிலா கடலின் தொடுவானப் பகுதியிலிருந்து சற்று மேலெழுந்து எட்டிப் பார்த்தது. அகதி முகாம் குடிசைகள் யாவும் சோபையிழந்துப் போய்க் கிடந்தன. ஓரிரு குடிசைகளில் மட்டும் மின்மினிப் பூச்சிபோல் விளக்கு எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

முகாமின் பக்கவாட்டில் செழித்து வளர்ந்திருந்த வேப்பமரத்தின் கீழுள்ள மணற் தரையில் சிவலிங்கம், கார்த்திகேசு, விநாயகமூர்த்தி ஆகியோர் அமர்ந்திருந்தனர். சில்லென்று வீசிய காற்று அவர்களின் உடலைத் தழுவிச் சென்றது. தொலைவில் மீன்பிடிக் கூட்டுத்தாபன கட்டிடத்திலிருந்து மின் விளக்கின் ஒளிக்கீறல் முகாமின் ஒரு பக்கத்தில் கோடுகள் போல் விழுந்து கொண்டிருந்தது.

போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு வருடங்கள் கடந்த பின்னரும் இல்லிடமாகிப்போன தங்கள் வாழிடங்களுக்கு செல்ல முடியாத தவிப்பு அவர்கள் உரையாடலில் இடம்பெற்றது. கொடிய யுத்தம் முனைப்புப் பெற்று இருபகுதியிலும் பெரும் மோதல்களும் இழப்புகளும் இடம் பெற்றுக்கொண்டிருந்த காலம் மனதில் நிழலாடியது.

யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரு பகுதியினரும் தாக்குதல்கள் செய்வதற்காகத் தம்மைப் பாதுகாக்க வேண்டியவர்களாகவும், தாங்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு தாக்குதல் செய்ய வேண்டியவர்களாகவும் இருந்த சூழ்நிலை.

அப்போது இவர்களது குடியிருப்புகளை அண்மித்த பகுதிகளிலே ஒரு கடற்படை முகாம் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்தக் கிழக்கு கடலோர மீனவர்களின் வாழ்வில் இருள்சூழத் தொடங்கியது. ஏற்கனவே பிறமாவட்டங்களிலிருந்து வந்து வாடியமைத்து, அரச மீன்பிடிக் கூட்டுத்தாபன உதவியுடன் தொழில் புரிந்து கொண்டிருந்தவர்களின் அடாவடித் தனங்களால் மனம் சோர்வுற்றிருந்த உள்ளூர் மீனவர்களுக்கு, கடற்படை முகாமமைப்பு இரட்டிப்புச் சுமையை ஏற்படுத்தியது.

முகாம் அமைத்த கடற்படையினர் அடிக்கடி வந்து சுற்றி வளைப்பு, விசாரணை என்று தொல்லை கொடுக்க ஆரம்பித்தார்கள். ஒரு நாள் கார்த்திகேசுவின் தம்பியையும் விநாயக மூர்த்தியின் மகனையும் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்றார்கள். வருடங்கள் பல கழிந்தும் இன்றுவரை அவர்கள் பற்றிய தகவலே கிடைக்கவில்லை.

திடீரென்று ஒரு நாள் உள்ளூர் மீனவர்களின் குடியிருப்புப் பிரதேசத்தை பாதுகாப்பு வலையம் என்று பிரகடனப் படுத்திய கடற்படையினர் இருபத்திநாலு மணி நேரத்தில் குடியிருப்புவாசிகள் வெளியேற வேண்டும் என்று உத்தர விட்டார்கள்.

இதனால் அவ்வூர் மீனவர்கள் கலங்கிப் போனார்கள்.

" நாங்க இப்ப வெளியேறி எங்கே போறது? வேற வீடுவாசல், காணி பூமி கூட இல்லை. இந்தக் கடலை விட்டால் தொழிலுமில்லை " சிவலிங்கம் ஆதங்கத்தோடு கூறினான்.

" இந்தக் குஞ்சு குமருகளோட எங்கே போய் ஒதுங்கிறது... " பவளம் சிவலிங்கத்தை கவலையோடு நோக்கினாள். எல்லா வீடுகளிலும் இதே கவலை. எல்லோரும் கூடிக் கூடிக் கதைத்தார்கள். " இப்ப என்ன செய்யலாம்? "

– ச. முருகானந்தம்

1976ஆம் ஆண்டு தொடக்கம் எழுத்துலகில் தடம்பதித்த டாக்டர் ச. முருகானந்தன் பல்துறை சார்ந்த எழுத்தாக்கங்களை எழுதிவந்த போதிலும் சிறந்த சிறுகதை எழுத்தாளராகவே இனம் காணப்பட்டார். சுமார் 200 சிறுகதைகள் வரை எழுதியுள்ள இவர் நான்கு சிறுகதைத் தொகுதிகளையும் ஒரு கவிதைத் தொகுதியையும், ஒரு கட்டுரைத் தொகுதியையும் நூலுருவில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

1979இல் சென்னை இலக்கிய சிந்தனைப் பரிசைப் பெற்ற முதலாவது இலங்கையராவார். " தரை மீன்கள் " சிறுகதை தொகுதி 2003ல் சாகித்ய மண்டல விருது பெற்றது. முத்தமிழ் விழா சிறுகதைப் போட்டி உட்பட இருபது தடவைகள் சிறுகதைக்காகவும், மூன்று தடவைகள் கவிதைக்காகவும் பரிசில்கள் பெற்றுள்ளார். இவரது சிறுகதைகள் தெலுங்கு, ஹிந்தி, சிங்களம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

'' நாங்க பொலிசிலை முறையிடுவோம்... '' என்றான் செபமாலை. பிரயோசனமில்லாத வேலை என விக்ரர் நினைத்தான்.

'' பொலிசிலை முறையிட்டு பயனில்லை. சிவில் அதிகாரியைச் சந்திப்போம் '' கார்த்திகேசு தனது அபிப்பிராயத்தைக் கூறினான்.

'' மாவட்டச் செயலரும் அவங்க ஆள்தானே? ஒரு காலத்தில் எங்கட தனித்தமிழ் பிரதேசமாக இருந்த இந்த மாவட்டம் இன்று அரச குடியேற்றத் திட்டங்களால் பறிபோய் கொண்டிருக்கு. வடக்குக்கும், கிழக்குக்கும் மகாவலி கங்கை வரபோகுது என்று மகிழ்ந்தோம். அது வெறும் நப்பாசையாகப் போச்சு. தண்ணி வருமுன்னரே பெரும்பான்மையின் குடியேற்றம் ஆற்றங்கரை எல்லாம் வந்திட்டுது. இப்ப எங்கட கடல் வளமும் பறிபோகுது... '' விநாயகமூர்த்தி உண்மை நிலையை எடுத்துக் கூறினான்.

'' எதுக்கும் மாவட்ட செயலாளரைச் சந்தித்து மனுக் கொடுக்கிறது தான் நல்லது.... ''

'' உதிலைமினக்கடுகிறதை விட்டுட்டு, நாங்க எழும்பாமல் இருப்பம்.... '' என்றான் விக்ரர்.

'' எழும்பாமலிருந்தால் செல் அடிச்சே கலைத்து விடுவார்கள்... எதுக்கும் அராசங்க அதிபரைச் சந்திக்கிறதுதான் நல்லது... '' இதை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

திட்டமிட்டபடியே அன்று அரச அதிபரிடம் மனுக் கொடுத்தார்கள். அவரும் அனுதாபத்தோடு இவர்களது பிரச்சனையைக் கேட்டறிந்தார். பின்னர் பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கதைத்தார். இறுதியில் சாதகமான முடிவு வந்தது.

'' நீங்கள் எழும்ப வேண்டியதில்லை... ஆனா பயங்கரவாதிகளை உங்கட பகுதியில் வரவிடக்கூடாது. அப்படி வந்தால் பிரச்சினைதான்... ''

'' நாங்களும் எங்கட தொழிலுமாக இருந்து சீவிக்கிறம்... எந்த தீவிரவாதியும் எங்கட பகுதிக்கு வரவிட மாட்டம்.... ''

'' வந்தால் தகவல் சொல்ல வேண்டும்..... ''

அரச அதிகாரியின் வாக்குறுதி நீண்ட நாள் நீடிக்கவில்லை. அடிக்கடி வந்த படையினரின் தொடர் தொல்லைகளைத் தாங்க முடியாதிருந்தது. செபமாலையின் சகோதரி ஜோசபீன், பெரியாஸ்பத்திரியில் தாதியாக இருப்பவள்.

ஒருநாள் கடமை முடிந்து திரும்பாததால் எல்லோரும் குழம்பித் தவித்தனர். இரவு ஊரடங்கு உத்தரவு ஆதலினால் தேடவும் முடியவில்லை.

மூன்று நாட்களின் பின்னர் முகாமுக்கு கிட்டவாக உள்ள கிணற்றிலிருந்து அவளது சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டது. ஊரே கதறி அழுதது.

ஜோசெபீன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாக சட்ட வைத்திய அதிகாரி பிரேத பிரசோதனை அறிக்கையில் தெரிவித்தார். உடனடியாக குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும்படி நீதிபதி பொலிசாருக்குப் பணித்தார். பத்திரிகைச் செய்திகள் பரபரப்பாக வெளியாகின. அவ்வளவுதான் இன்றுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவேயில்லை.

சில நாட்களின் பின் கடலில் மீன் பிடிப்பதும் தடை செய்யப்பட்டது. இதனால் அந்தக் கிராம மக்கள் தொழில் இழந்து வருவாயின்றி பசியாலும் பட்டினியாலும் வாடினர். அரச அதிபரிடம் கொடுக்கப்பட்ட மனுவை அடுத்து பகலில் மட்டும் அதுவும் குறிப்பிட்ட எல்லைக்குள் நின்று மீன் பிடிக்க அனுமதி கிடைத்தது. அவர்களது வாழ்க்கைப் பயணம் சிரமத்துடன் தொடர்ந்தது.

ஒருநாள் இரவு அந்த மீனவக் கிராமமே உறங்கிக் கொண்டிருந்த சாம வேளையில் ஆயுததாரிகள் பலர் உட்புகுந்து கிராமமக்கள் பலரை பெண்கள், குழந்தைகள் என்று கூடப் பார்க்காமல் வெட்டிச் சாய்த்தனர். தப்பிப் பிழைத்தவர்கள் சிதறி ஓடினர். பத்திரிகை, ஊடக தணிக்கை இருந்தபடியினாலும், வெளிநாட்டு நிருபர்களுக்குக் கூட அனுமதி இல்லாதமையினாலும் நடந்த அனர்த்தங்கள் அனைத்துமே மூடி மறைக்கப்பட்டன. லங்கா புவத்தும் இருட்டடிப்புச் செய்தது.

அன்று அகதியானவர்கள் தான்... பாடசாலைகளில் தஞ்சம் புகுந்து சில காலம் அதுவே அகதி முகாமாக இருந்தது. பின்னர் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியினால் அமைக்கப்பட்ட கீற்றுக் கொட்டகை முகாம்களிலிருந்து இப்போது சில நாட்களாக சிறு சிறு குடிசைகளமைத்து அகதிகளாக வாடிக்கொண்டிருக்கும் இவர்களது சோகம் அதிகமாக வெளியுலகுக்குத் தெரியாது. பசியிலும், பட்டினியிலும் வாடி, மழையிலும் பனியிலும் தோய்ந்து நோயிலும் நொடியிலுமாக இவர்கள் படுகின்ற அவலம் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை.

போர்த்தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இவர்களது மனதில் நம்பிக்கை ஒளிக்கீற்று தோன்றியது என்னவோ உண்மைதான். ஆனால் இன்று அதுவும் தேய்பிறையாக ஒளியிழந்து கொண்டிருக்கிறது. நிழலிலே பேசிக்கொண்டிருந்த மூவரின் பேச்சிலும் மீள்குடியேற்றம் பற்றிய ஆதங்கமே தொனித்தது.

'' அண்ணை பீடி இருந்தா தாங்க.... சரியான கூதலாக இருக்கு... ஒரு தரம் அடிச்சாதான் நல்லாயிருக்கும் '' என சிவலிங்கம் கேட்டதும், விநாயகமூர்த்தி மடியைத் துளாவிப் பார்த்தபடி, '' என்னிடமும் இல்லை..... '' என்றான். அருகிலிருந்த கார்த்திகேசு தனது காதில் செருகியிருந்த பீடியை எடுத்து நீட்டினான்.

'' விக்ரரை இன்னமும் காணோம்... முக்கியமான விசயம் கதைக்க வேணும் ரவுணுக்குப் போயிட்டு வாறன் என்று சொல்லிவிட்டுப் போனானே? '' சிவலிங்கம் வீதியைப் பார்த்தான். தொலைவில் யாரோ வருவது

நிலவொளியில் மங்களாகத் தெரிந்தது. விநாயகமூர்த்தி உற்றுப் பார்த்தான்.

விக்ரர் முகாம் வளாக கேற்றைத் திறந்து கொண்டு வந்து கொண்டிருந்தான்.

'' போன விசயம் எப்படி? எம்.பியைக் காணக் கிடைச்சுதா? ''

''இன்னும் சரியான முடிவு தெரியல்லெண்ணு எம்.பீ கூறினார். விரைவில் கடற்படை முகாமை வேறிடத்திற்கு மாற்றப் போறாங்க. அப்புறம் எங்களுடைய நிலமும் பாதுகாப்பு வலயமாக இருக்காது. நாங்க போய் மறுபடியும் குடியேறலாம். ''

விக்ரர் சற்று உற்சாகத்தோடு கூறினான்.

விக்ரர் வயதில் இளைஞன். அத்துடன் இவர்களைவிட நாலெழுத்துக் கூடப் படித்தவன். இதனால் அந்த அகதி முகாமிலிருந்த பெரியவர்கள் கூட அவனில் தனி மதிப்பு வைத்திருந்தனர். முகாமிலுள்ள இளைஞர்கள் எல்லோருமே அவனுக்கு நண்பர்கள். அவன் எள் என்றார் எண்ணெய்யையே கொண்டு வந்து விடுவார்கள்.

குடிசையிலிருந்த பவளம் இவர்களுக்குத் தேனீர் கொண்டு வந்துகொடுத்தாள். விக்ரரின் பார்வை குடிசைப்பக்கம் மேய்ந்தது. சுகந்தி கண்ணில் படுவாள் என்ற தவிப்பு ! மெல்லிய நிலவொளியில் எதுவும் தெரியவில்லை. தேனீர் இனிமையாக இருந்தது. சுகந்திதான் போட்டிருப்பாள் என்று விக்ரர் நினைத்தான்.

'' அப்ப கெதியிலை சரிவரும்என்று விக்ரர் தம்பி சொல்லுறியள். ''

'' சரிவரத்தானே வேணும்? எங்கட பொடியள் இவ்வளவு உயிரைத் தியாகம் செய்யுதுகள்... இது ஒரு தர்மயுத்தம் கண்டியளோ... மகாபாரதத்தில்.... '' விநாயகமூர்த்தி தனது புலமையைப் பறை சாற்றினான்.

'' அண்ணை இன்னொரு சந்தோசமான விசயம் எம்.பீ சொன்னவர். நாங்கள் எங்கட காணியிலை மீளக்குடியேறுவதற்கு புலம் பெயர்ந்த எங்கட வெளிநாட்டில உள்ளவர்கள் உதவி செய்யப் போகினமாம். ''

'' அந்தக் குளிரிலையும், பனியிலையும் கஸ்ரப்பட்டு உழைச்சு, தாயகத்தை மறக்காமல் உதவி செய்கின்ற அவர்களுடைய உதவி மகத்தானது. அரசாங்கம் உதவியும் செய்யாமல், பொருளாதாரத் தடையும் போட்டு உள்ளூரிலேயே எங்களை எதிரிகளாக்கி அகதியாக விரட்டின போது வெளிநாட்டில இருந்து எங்கட பிள்ளையள் அனுப்புகின்ற பணத்தால தான் தாக்குப் பிடிக்கிறம்... '' சிவலிங்கம் பூரிப்போடு கூறினான்.

'' உண்மைதான்... அவர்கள் அனுப்பும் பணத்தால்தான் இந்த நாசயுத்தத்திலையும் பட்டினிசாவுகள் தவிர்க்கப்பட்டிருக்கு... '' கார்த்திகேசுவும் இதை ஆமோதித்தான்.

'' ஒரு காலத்தில், யுத்தத்திற்குப் பயந்து புலம் பெயர்ந்தவர்களை சிலர் இழிவாகக் கதைக்கினம். ஆனா இப்போது அவர்களுடைய பொருளாதார உதவியால தான் இங்கே எல்லாமே நடக்குது... '' என்றான் விநாயகமூர்த்தி.

இன்றைய நிலவுப்பேச்சு இப்போது நிறைவுக்கு வரவே எல்லோரும் எழுந்து தமது குடிசைகளுக்கு சென்றார்கள். விக்ரர் தனது இளவட்ட நண்பர்களைச் சந்திக்க பிரசாந்தனின் குடிசைக்குச் சென்றான்.

முகாமின் பக்கவாட்டிலிருந்த வேப்பமரம் இவர்களுக்குத் தூயகாற்றைத் தருவதுடன், பகலில் நிழலையும் தருவதால், அதன் கீழ் மணல் பரவி நிழலில் கூடிக்கதைப்பார்கள். நிலாப் பொழியும் நாட்களில் இரவிலும் கூட மண்டப கூடம் இதே வேப்பமர நிழல்தான்.

அடுத்த சில நாட்கள் மீள் குடியேற்றம் பற்றி நினைவுகளின் மகிழ்வோடு முகாம் வாசிகள் சந்திக்கும் போதெல்லாம் உரையாடுவார்கள்.

பாதுகாப்பு வலய பிரதேசத்தில் காணியுள்ளவர்கள் மீள் குடியேற்றத்திற்குப் பதிவு செய்யும்படி வேண்டப்பட்ட போது எல்லோரும் மகிழ்ச்சியுடன் கிராமசேவை அலுவலரிடம் பதிவு செய்தனர்.

விரைவிலேயே கடற்படை முகாமும் அகற்றப்பட்ட சேதி அவர்கள் மனதில் பாலை வார்த்தது. இது காலவரை இருண்டு போயிருந்த முகங்களின் சோகங்களெல்லாம் விடைபெற, சொந்தக் காணிகளில் குடியேறப் போகும் மலர்ச்சி அனைவரின் முகங்களிலும் தெரிந்தது. கண்ணி வெடிகள் அகற்றிய பின் குடியேறலாம்.

ஒருநாள் மகிழ்ச்சியான சேதியோடு குடியிருப்புத் தலைவர் சிவலிங்கத்தைத் தேடி விக்ரர் வந்தான். குடிசை வாசலில் நின்று '' ஐயா '' என்று அழைத்தான். சுகந்திதான் வெளியே வந்து எட்டிப்பார்த்து இவனைக் கண்டு பூரிப்பும் பதட்டமுமாக வரவேற்றாள்.

'' வாங்கோ ''

'' அப்பா....? ''

'' அப்பாவும், அம்மாவும் குச்சவெளிக்கு ஒரு கல்யாண வீட்டுக்குப் போட்டினம்... ''

'' அப்ப நான் பிறகு வாறன்... ''

'' நில்லுங்கோ... தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம். '' சுகந்தி கொக்கி போட்டிழுத்தாள்.

'' இந்த வெயில் வெக்கைக்கு தேத்தண்ணியே? ''

'' தேசிக்காய் கரைக்கிறன்... ''

சுகந்தி எலுமிச்சை ரசத்துடன் வந்து அவனிடம் நீட்டினாள்.

'' நல்ல இனிப்பு... உம்மைப்போல... ''

'' கொஞ்சச் சீனிதான் போட்டனான்.. ''

'' உம்மட கை பட்டதெல்லே... '' அவனது பதிலில் அவள் '' கிளுக் '' என்று சிரித்தாள்.

'' மற்றவையின்ர கல்யாண வீட்டுக்குப் போயிருக்கினம். எப்பவாம் மகளின்ர கலியாணமாம்? ''

'' அதை நீங்கள்தான் சொல்ல வேணும். ''

'' வேதத்தில செய்ய உம்மட அப்பா அம்மாவை ஓமாமோ? '' அவளை நிமிர்ந்து பார்த்தான் விக்ரர்.

'' பேதங்களற்ற தாயக விடுதலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்ற போது சாதியும், சமயமும்... தமிழர் எல்லாம் ஒன்றுதான்.... ''

'' ஏன் மனிதர்களே ஒரே சாதிதான்... ஆனா ஆறறிவு படைச்ச மனிசன் இனமதம் என்று அடிபட்டுச் செத்துக் கொண்டிருக்கின்றதுதான் வேடிக்கை... ''

'' இப்ப அரசியலும், தத்துவமும் பேசவே வந்தனீங்கள்?... அம்மா அப்பாவை போனதைக் கண்டுட்டுத்தானே வந்தனீங்கள்...? ''

'' உம்மைப் பார்க்கவும் தான்... அதோட அப்பாவுக்கு ஒரு தகவல் சொல்ல வேணும்... எங்கட காணிகளிலே மிதிவெடி அகற்றி முடிஞ்சுதாம்... கெதியில நாங்கள் மீளக் குடியேறலாம்... எல்லைகள் தான் அழிஞ்சி போச்சு... ''

'' அப்ப இனி காணிக்காரிடையே எல்லைச் சண்டை தானென்று சொல்லுங்கோ... '' நீண்ட நேரம் சுகந்தியுடன் கதைத்து விட்டு வெளியேறினான் விக்ரர்.

அடுத்த சில நாட்கள் அகதி முகாம் வாசிகள் தமது மீளக்குடியேற்றம் பற்றிய இனிய எதிர்ப்பார்ப்புகளுடன் காத்திருந்தபோது, விக்ரர் எல்லோருக்கும் ஏமாற்ற மளிக்கும் தகவலோடு வந்து சேர்ந்தான்.

'' எங்கட காணிகளிலை வெளி மாவட்டத்துச் சிங்களவர் அடாத்தாகக் குடியேறியிருக்காங்கள். ''

'' இதென்ன அநியாயம்? நாங்க உடனே அரசாங்க அதிபரைச் சந்திங்க வேணும்... '' சிவலிங்கம் படபடத்தான்.

'' எந்தவித பலனும் இல்லை... அரசியல்வாதி, அதிகாரிகள், பொலிசார் எல்லோருடைய அனுசரணையுடன்தான் குடியேற்றம் நடந்திருக்கு... ''

'' இப்ப என்ன செய்யலாம்? ''

'' அரச அதிபரிடம் ஊர்வலமாய்ச் சென்று மகஜர் கொடுப்போம்... சத்தியாகிரகம் செய்வோம் '' என்று ஆவேசமாக விநாயக மூர்த்தி கூறினான்.

'' 1960ம் ஆண்டிலிருந்து சத்தியாக் கிரகம் செய்து என்னத்தைக் கண்டோம்...? '' பிரசாந்தனும் நண்பர்களும் சலிப்போடு கூறினார்கள்.

'' எதற்கும் அவர்கள் அரசாங்க அதிபரைச் சந்திக்கட்டும்... பிறகு யோசிப்பம்... '' என்றான் விக்ரர்.

'' சந்திக்கட்டும்... பிறகு யோசிப்பம். ''

அவர்களது பிரதிநிதிகளாக சிவலிங்கம், கார்த்திகேசு, விக்ரர் ஆகிய மூவரும் அரசஅதிபரைச் சந்தித்தார்கள்.

'' நீங்க சொல்லுறது சரி. அது உங்கட காணிகள் என்பதற்கு என்ன ஆதாரம்? ''

'' எங்கட உறுதிகள் எல்லாம் எரிஞ்சு போச்சு ஐயா... ''

'' அதுக்கு நான் ஒன்றும் செய்யேலாது. பிரதி எடுத்து வாங்க... '' பிரதிகளுக்கு விண்ணப்பித்தார்கள். பதிவேடுகள் சிதைந்துப் போனதாகப் பதில் வந்தது. எம்.பீயும் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். எனினும் அத்துமீறிக் குடியேறியவர்களை எழுப்ப முடியவில்லை.

அகதி முகாம் வாசிகள் நொடிந்து போயினர் '' ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ. முள்ளை முள்ளால தான் எடுக்க வேணும்... '' விக்ரர் ஆவேசமாகக் கூறினான்.

இரவு நடுநிசியைத் தாண்டிவிட்டது. எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. விக்ரர், பிரசாந் மற்றும் முகாமைச் சேர்ந்த இளைஞர்கள் கையில் கத்தி, பொல்லு முதலிய ஆயுதங்களுடன் தமது குடியிருப்புக் காணிகளில் நுழைந்தனர்.

மறுநாள்...

பயங்கரவாதிகள் சிங்கள அப்பாவிகளின் குடியிருப்புகளில் புகுந்து தாக்கி, கொலை செய்து தீயிட்டனர். லங்கா புவத்தை ஆதாரம் காட்டி வானொலிகளும் தொலைகாட்சிகளும் செய்தி வெளியிட்டன. குடியிருப்புக் காணிகளில் இப்போது எவரும் இல்லை! விடியும்... இனி விடியும்.

(நன்றி : ஞானம், இலங்கை)

முதல் ஜாமத்தில் வில்வம்; இரண்டாம் ஜாமத்தில் பலா; மூன்றாம் ஞாமத்தில் மாதுளை ; நான்காம் ஜாமத்தில் பலவகைப் பழங்களை ஈசனுக்கு நிவேதனம் செய்தல் வேண்டும்.

உளழிமுடிவுக்குப் பின் உலகம் மீண்டும் தோன்ற வேண்டும் என்பதற்காக, ஓர் இரவின் நான்கு ஜாமங்களிலும் உமாதேவியார் சிவபூஜை செய்து விழித்திருந்தார். அந்த இரவே சிவராத்திரி.

அரியும் அரனும் யார் பெரியவர் எனப் போட்டியிட்ட போது, அரன் ஜோதி வடிவாக விண்ணும் மண்ணும் தொட்டு நின்ற காலமே சிவராத்திரி.

சிவம் என்றால் மங்களம் என்பது பொருள். மங்களங்களை அளிக்கவல்ல ராத்திரி என்பதே சிவராத்திரி என்பதன் பொருள்.

அரனின் அருவுருவ வடிவான லிங்கோஷ்பவ வடிவம் உற்பத்தியான தினமே சிவராத்திரி தினம்.

தமிழ் பாதுகாப்புப் போராட்டம் அவசியம்

ஜெயக்குமார்

தமிழகத்தில் இப்போது ஒரு கூட்டம் '' தமிழ்ப் பாதுகாப்புக் குழு '' என்ற பெயரில் தமிழைப் பாதுகாப்பதாக கூறிக்கொண்டு சில போராட்டங்களை நடத்திக் கொண்டு வருகிறது. அவை என்ன போராட்டங்கள் என்று பார்த்தால் தமிழ் சினிமாவிற்கு ஆங்கிலப் பெயர் எதிர்ப்பு, இந்தி எழுத்துக்களை தார் கொண்டு அழிப்பது, மற்ற மொழிகளைக் கற்றுக் கொள்ள எதிர்ப்பு, கற்பு பற்றி குஷ்பு கூறியதற்கு எதிர்ப்பு மற்றும் அவருக்கு ஆதரவு தெரிவித்த சுகாஸினிக்கு எதிர்ப்பு போன்றவைதான். இப்படிப்பட்ட போராட்டங்களால் தமிழ் வளர்ந்து விடுமா? என்றால் நிச்சயமாகஇல்லை என்றுதான் நான் சொல்வேன்.

உங்கள் வெற்றி என்பது மற்றவர்களின் தோல்வி மற்றும் அல்ல. ஓட்டப்பந்தயத்தில் சிறப்பாக ஓடி வெற்றிப் பெற வேண்டுமேயன்றி முன்னால் ஓடுபவர்களின் கால்களுக்கு இடையில் கம்பைவிட்டு அவர்களை கீழே விழச் செய்து நீங்கள் வெற்றிப் பெறக்கூடாது. நம் அழகு தமிழை வளர்க்க வேண்டும் என்றால் அதற்கு விஞ்ஞான பூர்வமாக சிந்தித்து திட்டங்களை வகுத்து செயல்படவேண்டுமே தவிர, மற்றவர்களை குறைக் கூறிக் கொண்டும் மற்ற மொழிகளைக் குறைகூறிக் கொண்டும் இருக்கக் கூடாது.

தமிழ் இவர்கள் அறியா இணையத் தளங்கள் வாயிலாக நன்றாக வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. மேலும் தமிழக அரசு நினைத்தால் எளிதாக தமிழை வளர்க்க முடியும். அப்படி அவர்கள் வளர்க்கத் தவறினால் சில போராட்டங்களை நடத்தி அரசிடம் பின்வரும் கோரிக்கைகள் முன் வைக்கலாம்.

1. பாடசாலைகளில் 10ஆம் வகுப்பு வரை தமிழை ஒரு மொழியாக படித்தவர்களுக்கு மட்டுமே அரசு வேலை என்று ஆணை பிறப்பிக்கச் சொல்லலாம்.
2. பொறியியல் மற்றும் மருத்துவ பட்டப் படிப்புகளுக்கு இப்போது எடுத்துக் கொள்ளும் கணிதம், இயற்பியல், வேதியல் மற்றும் உயிரியல் பாடங்களுடன் தமிழையும் சேர்த்துக் கொள்ள அரசை வலியுருத்தலாம். இதனால் மாணவர்கள் தமிழிலும் அதிக புள்ளிகள் எடுக்க முயற்சி செய்வார்கள். அப்படிப் படிக்கும் போது தமிழின் சுவை அறிந்து அதில் அவர்களுக்கு ஆர்வமும் ஏற்படும்.

   காதராஜர் முதல்வராக இருந்த காலத்தில் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் ஆடு, மாடு மற்றும் வீட்டு வேலைகள் செய்து கொண்டிருந்த சிறுவர்கள் ஒரு வேளை உணவுக்காகவாவது பாடசாலைக்கு வந்து பாடம் கற்க மாட்டார்களா என்ற எண்ணத்தில் தான் மதிய உணவுத் திட்டத்தை ஆரம்பித்தார்கள். அதே போல அரசு வேலை வாய்ப்பு, பொறியியல் மற்றும் மருத்துவப் பட்ட படிப்புகளுக்காகவாவது நம் இளைய தலைமுறை தமிழ் படிக்கட்டும் அதன் சுவை அறியட்டும்.

   மேற்கூறிய யோசனைகள் தமிழ் எங்கள் மூச்சு, தமிழ் எங்கள் உயிர் மற்றும் தான் ஒரு தமிழினத் தலைவர் என்று கூறிக் கொள்ளும் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு தெரியவில்லையா அல்லது அப்படி செய்தால் ஆங்கில மொழி வழி பயிலும் தன் பேரன், பேத்திகளுக்கு மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் போய்விடும் என்ற சுயநலத்தில் செய்யாமல் விட்டிருப்பாரா? இவருடைய கட்சியுடன் கூட்டணி வைத்துள்ளவர்கள்தான் இன்று தமிழ் பாதுகாப்புக் குழுவின் தூண்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள். இதே தலைவர்கள் கூட நாளை நம் நாட்டின் முதல்வராக வந்தாலும் தங்களின் வாரிசுகள் நலம் கருதி இதைச் செய்யமாட்டார்கள்.
3. ஊட்டி, கொடைக்கானல் ஏன் சென்னையில்கூட சில பாடசாலைகளில் தமிழ் தடைசெய்யப்பட்டுள்ளது. பாடசாலை வளாகத்துக்குள் தமிழில் பேசினால் அபராதமும் விதிக்கப்படுகிறது. (தமிழக இளைஞர்கள் தங்கள் தலைவராக எண்ணிக் கொண்டிருக்கும் ரஜினியின் மனைவி நடத்தும் பாடசாலைகளிலும் இப்படித்தான் என்று கேள்விப்பட்டேன்). இப்பாடசாலைகளிலும் அனுமதியை இரத்து செய்ய போராட்டம் நடத்தலாம்.
4. தினம், தினம் நம் அழகு தமிழை கொலை செய்து கொண்டிருப்பது இங்கே ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆதரவு தொலைக்காட்சிகள்தான். இலங்கைத் தமிழர்களால் ஐரோப்பாவிலிருந்து ஒளிப்பரப்பாகும் சில தொலைக்காட்சிகள் அனைத்து நிகழ்ச்சிகளையும் அழகு தமிழில் தொகுத்து வழங்குகின்றன. அந்த நிகழ்ச்சிகளை பார்க்கும் நமக்கு அவர்களுக்கு தமிழ் தவிர வேறு எந்த மொழியும் தெரியாதா என்ற சந்தேகம் கூட எழும். அந்தளவுக்குச் சிறப்பாக வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இங்கு தொடர்ச்சியாக 4 வார்த்தைகள் தமிழ் பேசத் தெரியாதவர்கள்தான் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக உள்ளனர். பகுத்தறிவு பேசும் கருணாநிதியின் குடும்பத் தொலைக்காட்சியில் கூட முழுக்க முழுக்க மூட நம்பிக்கைகளை வளர்க்கும் தொடர்கள்தான் வலம் வருகின்றன. நம் மொழியை அழிக்க நினைக்கும் இவர்களுக்கு எதிராக போராடுங்கள்.

தமிழ் பாதுகாப்புப் போராட்டம் என்பது நம் மொழியைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் அதை அழிக்கும் சத்திகளிடம் இருந்து காப்பாற்றுவதாகவும் அமைய வேண்டும்.

நன்றி : திண்ணை

அறிவாய் நெஞ்சே

– முதற்சித்தன் –

அறிவாலே அறிவதனை அறிந்து கொண்டால்
அறிவுக்கு ஆக்கமுண்டு அழிவு யில்லை !
அறிவாலே அறிவுவடி வாகத் தன்னை
அறிந்தவரும் திருமூலர் அறிவாய் நெஞ்சே !
அறிவாலே அறிவறிய மென்ற நூல்கள்
அத்தனையும் கற்றிடவே வேண்டும் நெஞ்சே !
அறிவாலே உயர்வுண்டு தாழ்வு இல்லை !
அறிவாலே ஆக்கமுண்டு அறிவாய் நெஞ்சே !

கலையாக காண்கின்ற கண்ணி ருந்தால்
காமத்தை வென்றிடலாம் அறிவாய் நெஞ்சே !
கலையாத வாழ்க்கைக்கு கற்பு நன்றாம் !
கற்புநெறி ஆடவரே பேண வேண்டும்
கலையான இடகலைபிங் கலையி ரண்டில்
காற்றதனை ஏற்றியிறக் கிநடு நிற்கும்
கலையான சுழுமுனையில் பதிய வைத்தால்
கலைகின்ற உயிருக்குக் கேடு இல்லை !

உடலுக்குள் ஆதாரம் ஆறி ருக்கும்
உயர்வுக்கு யோகத்தில் பயிற்சி வேண்டும் !
உடலுக்கு உயிரேஆ தாரம் நெஞ்சே!
உயிருக்கு ஆதாரம் இதுதா னென்று
உடலுக்குள் எதனையுமே குறிக்க லாகா !
உள்ளதெலாம் உயிருக்கு ஆதார மாகும் !
உடலுக்குள் இறையாக உயிர் ருக்க
உணராமல் இறைதேடி அலைவார் வீணர் !

திடமாக உடலிருக்க நோயு மில்லை !
தினந்தோறும் உழைப்பதற்கே தியானம் நன்று !
திடமாக வாக்கொன்றி வாழ்த லாலே
திறமாக செயல்சிறக்கும் திறமை ஓங்கும் !
இடமாக இறைவனுக்கு உடலை வைப்பாய் !
இதயத்தில் அன்போடு அருள்சு ரக்கும்!
திடமாக அறம்செய்து வாழ்வோர்க் கென்றும்
தினையளந் தும்பமில்லை அறிவாய் நெஞ்சே !

தொடரும்

சைவ சித்தாந்த சாத்திரங்கள்

இயேசுவின் நற்செய்தியைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்த தோமா, தமிழர்களால் கொல்லப்படாமல், ' பிராமணர்களால் கொல்லப்பட்டார் ' என்ற குறிப்புச் சிந்தனைக்குரியது. வடபுலத்திலிருந்து தமிழகத்தில் பரவிய வேள்விக் கோட்பாட்டையுடைய ஆரியர் நாகரித்துக்கும், மேல் புலத்திலிருந்து தமிழகத்தில் பரவிய வேள்வி நிறைவேற்றக் கோட்பாட்டையுடைய யவனக் கருத்திற்கும் இருந்த போட்டியில் தோமா கொல்லப்பட்டதும் தோமாவுக்குப் பின்னர் யவனக் கருத்துகளின் செல்வாக்கால் வளர்ந்த சைவ வைணவ சமயங்கள் வெற்றி பெற்றதும் எண்ணிப் பார்க்கத்தக்கன.

சைவ வைணவ சமயங்கள் பரவுவதற்குக் காரணமாயிருந்த 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள் ஆகியோர், தமிழ் நாட்டிலிருந்து மட்டுமே தோன்றியவர்கள் என்கிற குறிப்பு ஆழ்ந்த சிந்தனைக்குரியது. சைவ வைணவ சமயங்கள் வட நாட்டிலிருந்து தென்னாட்டிற்குப் பரப்பப்பட்டவையல்ல. தென்னாட்டில் தோன்றி வட நாட்டிற்கு பரவியவை. சைவ, வைணவம் சமயங்களின் தொகுப்பு நூல்களாக விளங்கும் பன்னிரு திருமுறையும் நாலாயிர திவ்விய பிரபந்தமும் தமிழ் மொழியில் ' மட்டும் ' தோன்றியவை என்பதும், வடமொழிக்கும் இவைகளுக்கும் தொடர்பில்லை என்பதும் ஆழ்ந்து நோக்கவேண்டிய கருத்துகளாகும்.

சைவ, வைணவ சமயக் கருத்துக்கள் முதலிலே தமிழகத்தில் தோன்றிப் பின்னர் மற்ற இடங்களிலும் பரவும்படியாகத் தமிழ்ப் பெரியோர்களால், வடமொழியிலும் எழுதப்படலாயின. இச்சமயங்களுக்கு மூலம் தமிழ் மொழியேயன்றி வடமொழியன்று, தமிழ் மொழியிலிருந்து வடமொழிக்குச் சென்ற கருத்துக் களேயன்றி, வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்த கருத்துக்கள் அல்ல.

வடமொழயிலிருந்து வடவர் ஆதிக்கத்தால் இக்கருத்துக்கள் தென் மொழியில் பரவின என்னும் தவறான கருத்து, இன்று வரைநிலவுவதற்குக் காரணம் என்ன என்பது எண்ணிப்பார்க்கத் தக்கது. இந்த நோக்கில் நாம் சைவ வைணவ வரலாற்றை நோக்கும்போது நமக்குச் சில குறிப்புகள் தென்படுகின்றன.

வைணவ சமயத்தில் பிற்காலத்தில் ஏற்பட்ட வடமொழி ஆதிக்கத்தை எதிர்த்து, நாலாயிரம் திவ்ய பிரபந்தத்தைப் பாராட்டும் தென் கலையினர் எழுந்த காரணத்தால், வைணவம் தென்கலை, வடகலை என இரண்டாகப் பிரிந்த போதிலும், வைணவத்தில் தமிழின் சிறப்பு குறைக்கப்படவில்லை.

ஆனால், சைவமோ வடமொழி ஆதிக்கத்துக்கு முழுவதுமாக உட்படுத்தப்பட்டுவிட்டது. அவ்வாறு சைவத்தை வடமொழி ஆதிக்கத்திற்கு உட்படுத்திய பெருமை, திருஞானசம்பந்தரையே சாரும்.

சைவம், வைணவம் ஆகிய இரண்டில், தமிழ் சமயம் எனவும் தென்னாட்டுச் சமயமெனவும் தென்னாடு உடைய சிவனைப் போற்றும் சமயம் எனவும் சைவம் சொல்லப்படுகிறது. வைணவத்தை நோக்கும் பொழுது, சைவத்தை விட, வடநாட்டினரை அணைத்துச் செல்லும் சமயமாகவும் வடநாட்டு இதிகாசங்களாகிய இராமாயணம், மகாபாரதம் இவைகளில் கூறப்படும் வீரபுருஷர்களை அவதாரப் புருஷராக ஏற்றுக் கொண்ட சமயமாகவும் காணப்பட்ட போதிலும், வடவர்களுக்கு முற்றிலும் அடிமைப்படாத சமயமாக அது விளங்குகிறது எனலாம். இன்றும் இறைவன் திருமேனி நகர்வலம் வருங்கால், வைணவத்தில் விஷ்ணுவிற்கு முன்பாகத் தமிழ் செல்கின்றது. விஷ்ணுவிற்குப் பின்பாகவே வடமொழி வருகிறது. ஆனால் சைவத்திலோ, சிவனுக்கு முன்பாக வடமொழியும் சிவனுக்குப் பின்னால் தமிழும் வரக்கூடிய நிலையே காணப்படுகிறது.

(விஷ்ணுவின் பிள்ளைகளாகக் காட்டப்படும் பிரம்மன், ஐயப்பன் இவர்களுக்கும் வீர புருஷர்களாக இருந்து அவதார புருஷர்களாக நினைக்கப்படுகின்ற இராமர், கிருஷ்ணர் இவர்களுக்கும் பிறப்பில் வேற்றுமை கூறப்பட்டிருப்பது எண்ணிப்பார்க்கத் தக்கது. இராமன், கிருஷ்ணன் என்பவர்களுடைய தந்தையர் உலக மனிதர்கள். பிரம்மன், ஐயப்பன் இவர்களுடைய தந்தையர் முழுமுதற் கடவுளாக எண்ணப்படும் சிவன். இராமனும் கிருஷ்ணனும் அவதார புருஷர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் பரிசுத்த ஆவியின் ஆண் தன்மையாகிய விஷ்ணுவின் அருள் பெற்றவர்களாகவே கூறப்பட்டுள்ளனர். பிரம்மன், ஐயப்பனைப் போன்று விஷ்ணுவினால் பெற்றெடுக்கப்பட்டவர்களாக கொள்ளப் பட்டவர் அல்லர்.)

சைவம், தென்னாட்டுச் சமயம் – தமிழர் என உரிமை பாராட்டிக் கொண்டாலும், வடவர் ஆதிக்கத்திற்கு முழுமையாக உட்பட்டுவிட்ட சமயமாக விளங்குகிறது. நாம் முன்னர் பார்த்தபடி, இதற்குக் காரணம் திருஞானசம்பந்தரும் அவர் வழிவந்த வடமொழியாளர்களுமே ஆவர்.

திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப்பாடல்கள், முதல் மூன்று திருமுறைகளாக பன்னிரு திருமுறையில்

வைக்கப்பட்டுள்ளன. அதன் பின் அப்பருக்கும் மற்றவர்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலைக்குக் காரணம் என்ன என்பது எண்ணிப்பார்க்கத் தக்கது.

வேள்விக் கோட்பாட்டையுடைய ஆரிய நாகரிகத்திலிருந்து எழுந்த வைதீக சமயம் அதனை எதிர்த்து எழுந்த வேள்வி மறுப்புக் கோட்பாட்டையுடைய சமண பௌத்த சமயங்களின் முன்நிற்க இயலாமல் வீழ்ச்சியடைந்த காரணத்தால், கிறிஸ்தவ நூற்றாண்டையொட்டி வடநாட்டிலிருந்து விடுபட்டுத் தென்னாட்டிற்கு வந்து சேர்ந்தது எனலாம்.

அசோகருக்குப் பிற்பட்ட காலங்களில், வட இந்தியா முழுவதும் பௌத்த சமயம் பரவி இருந்ததும் தென்னாட்டில் சைவ வைணவ எழுச்சிக்கு முன்னர் பல்லவரும் பாண்டியரும் சமணர்களாய் இருந்தமையும் சான்றாகும்.

தென்னாட்டிலும் தோமாவின் நற்செய்தியின் பயனாக எழுச்சியடைந்த திராவிடர்களிடையே, ஆரிய வைதீகம் செல்வாக்குப் பெற இயலவில்லை. வேள்வி மறுப்புக் கோட்பாடுடைய சமய பௌத்த சமயங்களை எதிர்த்து நிற்க, கேள்விக் கோட்பாட்டையுடைய ஆரிய வைதீக சமயத்தால் இயலா நிலையில், வேள்வி நிறைவேற்றக் கோட்பாட்டையுடைய இயேசுவின் நற்செய்தி, திராவிட சமயங்களாக வலிமையோடு எழத் தொடங்கியது.

(வைதீகம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆரிய வேதங்களாகிய ரிக், யசுர், சாமம், அதர்வணம் இவைகளைக் கொண்டது ஆரிய வைதீகம், கிறிஸ்தவ வேதத்தை அடிப்படையாகக் கொண்டது கிறிஸ்தவ வைதீகம்.)

ஒதுக்கப்பட்டுக்கிடந்த வடநாட்டு வைதீக மதம், பௌத்த சமண மதங்களைப் போன்று செல்வாக்குப் பெற முயன்றது. செல்வாக்குப் பெற வேண்டுமானால் இவ்விரண்டு மதங்களையும் அடக்கி ஒடுக்க வைதீக மதத்திற்கு ஆற்றலும் ஆண்மையும் இல்லை. ஆற்றலும், ஆண்மையும் பெற வழி யாது ? ஒரே ஒரு வழிதான் உண்டு. அவ்வழி யாது எனின், தமிழர் வழிபட்டு வரும் திராவிட மதத்துடன் வைதீக மதமும் கலந்து கொண்டு, பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதுதான், இதைச் செய்ய வைதீக மதம் முற்பட்டது. நீரில் மூழ்கி உயிர் இழக்கும் தருவாயில் இருக்கும் ஒருவனுக்கு, ஏதேனும் பற்றுக்கோடு கிடைக்குமாயின், அதனை அவன் எவ்வாறு இறுகப் பற்றிக் கொள்வானோ, அவ்வாறே அழியும் தருவாயில் இருந்த வைதீக மதம், திராவிட மதத்தின் தெய்வங்களாகிய முருகன், கொற்றவை, சிவன், திருமால் முதலிய தெய்வங்களைஏற்றுக் கொண்டது.

ஏற்றுக் கொண்டதோடு நில்லாமல், திராவிட வைதீக தொடர்பை உறுதிப் படுத்திக் கொள்ளும் பொருட்டு திராவிட தெய்வங்களுக்கும், வைதீக தெய்வங்களுக்கும் புதிய தொடர்பையும், உறவுகளையும் கற்பித்துக் கொண்டது.

இவைகளுக்கு ஏற்ற முறையில் புதிது புதிதாக புராணங்கள் கற்பித்து எழுதப்பட்டன. இவ்வாறெல்லாம் திராவிட மதமும், வைதீக மதமும் ஒன்றோடு ஒன்று கலக்கப் பெற்று திராவிடமும், வைதீகமும் அல்லாமல் இரண்டும் கலந்ததோர் புதிய மதமாக மாறிற்று. இவ்வாறு புதிதாக தோன்றிய மதம்தான் ' இந்து மதம் ' என்பது என மயிலை சீனி வேங்கடசாமி கூறுகிறார். (மயிலை சீனி வேங்கடசாமி சமணமும், தமிழும் பக்.58-59)

ஆரியர்கள் திராவிட மதத்தை ஏற்றதற்கு காரணம் மேலே சீனி வேங்கடசாமி அவர்களால் தெளிவாகக் கூறப்படுகிறது. திராவிட சமயத்தின் சிறந்த - உயர்ந்த கொள்கைகளை விரும்பி, ஆரியர்கள் திராவிட சமயத்திற்குள் வரவில்லை. வேள்வி மறுப்புக் கோட்பாட்டையுடைய திராவிட சமயங்களை சமண பௌத்தர்களுக்கு எதிரான ஆயுதங்களாக பயன் படுத்தவே, அவர்கள் திராவிட சமயங்களை ஏற்றனர்.

இந்நிலையைச் சைவ சமய வரலாறு நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. சைவ சமயம் தமிழ் மக்களால் போற்றப்பட்டு எழுச்சியடைந்து தமிழராகிய திருநாவுக்கரசரால், பல்லவ மன்னன் சைவனாக்கப்பட்ட போது அரசாங்க சமயமாக அது உயர்ந்தது. இதன் எதிரொலியாகத் தமிழக மக்கள் அணி அணியாகச் சைவ சமயத்தைச் சார்ந்தனர்.

டாக்டர் மு. தெய்வநாயகம் எம்.ஏ. பி.எச்.டி

நன்றி: நம்பிக்கை.

விரதம் இருந்தால் முதுமை நெருங்காது

இயந்திரங்கள் தொடர்ந்து ஓடிக் கொண்டே இருந்தால் சீக்கிரம் பழுது பட்டுவிடும். மனிதனால் உருவாக்கப்பட்ட சாதனங்களுக்கே இந்த கதி என்றால், மனிதனுக்கு ஓய்வு மிக மிக முக்கியம்தானே. ஆனால் லீவு கிடைத்துவிட்டால் எப்படியெல்லாம் ஜாலியாக கொண்டாடுவது என்று திட்டமிடுகிறோம். அந்த வகையில் வெளி இடங்களுக்கு சுற்றுலா போகிறோம். ஹோட்டல்களுக்கு போய் சாப்பிடுகிறோம். வீட்டல் விதவிதமான உணவுகளை தயாரித்து ஒரு வெட்டு வெட்டுகிறோம். ஆனால் நாம் ஓய்வாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோமே தவிர, உடல் உறுப்புகளுக்கு லீவு கொடுக்க வேண்டும் என்று எத்தனை பேர் நினைக்கிறோம்? குறிப்பாக ஓயாமல் இயங்கிக் கொண்டிருக்கும் ஜீரண மண்டலத்துக்கு அப்பப்போ கொஞ்சம் ஓய்வு கொடுக்கிறது ரொம்ப நல்லது என்கிறார்கள் மருத்துவர்கள். அப்படி இல்லேன்னா... தேவைக்கு அதிக உணவு உடல் உறுப்புகளுக்கு சோர்வை அளிப்பதுடன் பலவித நோய்களுக்கும் காரணமாகிவிடுகிறது. எனவே உண்ணா நோன்பு இருப்பது அவசியம். அதனால் கொழுப்புச் சத்து குறைகிறது. உடல் சுமை குறைகிறது. ரத்தம் கூட தூய்மையாகிறதாம். இருமல் சளி நீங்குகிறது. முக்கியமாக நோய் தடுப்பாற்றல் அதிகரிக்கிறதாம்.

குறைந்த பட்சம் வாரத்தில் ஒருநாளாவது உண்ணாவிரதம் இருந்தால் முதுமை நெருங்கவே பயப்படும் என்று மருத்துவ உலகம் கூறுகிறது.

சோகை நோய்க்கு இயற்கை மருத்துவம்

டாக்டர் எச்.கே. பாக்ரூ

நமது இரத்தநாளங்களில் ஓடும் இரத்தம் உண்மையில் உயிருள்ள திசுவாகும். இரத்தத்தில் பாதி சிவப்பு அணுக்களே, இச்சிவப்பு அணுக்கள் உடல் திசுக்களுக்கு ஆக்சிஜன் எனும் உயிர்க்காற்றைக் கொண்டு செல்கின்றன. நமது எலும்பு மஜ்ஜையில் நாள்தோறும் கிட்டத்தட்ட ஒரு டிரில்லியன் (10,000 மில்லியன் – 1 மில்லியன் என்பது 10 இலட்சம் ஆகும்). இரத்தச் சிவப்பணுக்கள் உற்பத்தி யாகின்றன. இச்சிவப்பணுக்கள் உற்பத்தியாக தேவைப்படும் பொருட்கள் – இரும்பு, புரதம், வைட்டமின்கள் குறிப்பாக ஃபோலிக் அமிலம் மற்றும் பி12 ஆகும்.

சிவப்பு நிறம் தரும் பொருளான ஹீமோகுளோபின் ஒருவகைப் புரதம் ஆகும். இதில் ஹீம் எனப்படும் ஒருவகை அங்கக இரும்புக்கூட்டுப் பொருள் அடங்கியுள்ளது. குளோபின் என்பது கந்தகம் அடங்கிய புரதம், இதுவே இந்த மூலக்கூறுகளில் 95% அடங்கியுள்ளது. எனவே உணவில் போதுமான இரும்பு மற்றும் புரதம் ஆகியவை அடங்கியிருந்தால்தான் ஹீமோகுளோபின் உருவாக வழியுண்டு. சிவப்பணுக்களின் வாழ்நாள் கிட்டத் தட்ட 120 நாட்களாகும். அதன் பிறகு இவை அழிக்கப்பட்டு அன்றாடம் புதிய சிவப்பணுக்கள் உற்பத்தியால் ஈடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆளுக்கும் 100% ஹீமோகுளோபின் அல்லது 100 CC இரத்தத்தில் 15 கிராம் ஹீமோகுளோபின் அடங்கியிருக்க வேண்டும். இத்துடன் ஒரு மில்லி மீட்டருக்கு 5 மில்லியன் சிவப்பணுக்கள் வீதம் இடம் பெற்றிருக்க வேண்டும். இந்த ஹீமோகுளோபின் உள்ளடக்கத்தில் வீழ்ச்சி ஏற்பட்டால் இரத்த சோகையில்தான் முடியும். இதன் விளைவாக இரத்தத்தால் உடல் திசுக்களுக்கு தேவையான உயிர்க் காற்றை எடுத்துச் செல்ல முடியாமல் போய்விடுகிறது.

அறிகுறிகள்

குழிவிழுந்த கண்கள், வெளுத்த தோற்றம், கண்களைச் சுற்றி கருவளையங்கள், தோல் சாம்பல் நிறமடைதல், சோர்வு தட்டிய பார்வை போன்றவை இரத்தசோகையின் தலையாய அறிகுறியாகும். பிற அறிகுறிகள் – நினைவாற்றல் குறைவு, வலுவின்மை, கிறுகிறுப்பு, களைப்பு, ஆற்றலின்மை, சிறுமூச்சு, காயங்கள் மெது வாக குணமடைதல், தலைவலி, மன இறுக்கங்கள், விரல் நகங்கள், உதடுகள், உடல் வெளுத்தல், நோயாளி பலவீனமாக இருப்பதாகவும் எளிதில் சோர்வு தட்டுவ தாகவும், உடம்பில் சக்தி இல்லை தலை சுற்றல் வருகிறது என்றும் முறையிடுவது வழக்கம்.

காரணங்கள்

இரத்த சோகைக்கு இரு அடிப்படை காரணங்கள் உண்டு. எலும்பு மஜ்ஜைக் கோளாறு காரணமாகவோ உணவில் இரும்பு, வைட்டமின்கள், புரதம் போன்றவை குறைவாக இருப்பதாலோ இரத்த செல்கள் உற்பத்தியாவது குறைவதால் அல்லது சிறு அளவில் மட்டுமே உற்பத்தியாவதால் இரத்த சோகை வரும். காயம் அல்லது இரத்தப் போக்குடன் கூடிய மூலநோய் காரணமாக அல்லது அதிக அளவில் மாதவிடாய் உண்டாவதால் மிகுதியான இரத்தப் போக்கு ஏற்பட்டு இரத்த சோகை உண்டாகிறது. இரும்பையும் புரதங்களையும், செரிப்பதற்குத் தேவையான செரிமான நீராகிய ஹைட்ரோ குளோரிக் அமிலச் சுரப்பு குறைவதனாலும் சோகை உண்டாகலாம். மன உணர்வுகளில் இறுக்க நிலை, கவலை ஏக்கம் போன்றவை உடலில் ஹைட்ரோ குளோரிக் அமில சுரப்பை குறைத்து விடுவது வழக்கம். மேலும் வைட்டமின் ஈ-யை அழித்துவிடும் பல்வேறு மருந்துகளாலும் இரத்தச் செல்களை உருவாக்க உதவும் சத்துப் பொருட்களை செயலிழக்கச் செய்யும் பிற மருந்துகளாலும் இரத்தசோகை உண்டாகிறது. காசநோய் போன்ற நாட்பட்ட நோய்களுடன் இரத்தபோக்கு இருந்தாலும் இரத்தசோகை உண்டாகும்.

பிற காரணங்களான குடல் புழுக்கள் மற்றும் ஒட்டுயிரிகளின் தாக்குதலாலும் சிறு அளவில் இரத்தசோகை உண்டாகக்கூடும். கொக்கிப்புழு, ஊசிப்புழு, உருண்டைப் புழு, தட்டைப்புழுக்கள் இரத்தத்தை உறிஞ்சியும் வைட்டமின்களை உறிஞ்சியும் வாழ்கின்றன. 25 கொக்கிப் புழுக்கள் நாள்தோறும் 15 கிராம் இரத்தத்தை உறிஞ்சக் கூடியவை. வைட்டமின் பி-12இல் பெரும் பற்றாக்குறை வையும் உண்டாக்கக்கூடியவை. குடலில் புழுக்கல் இருப்பதற்கு அறிகுறிகள் : ஆசனவாயில் அரிப்பு, இரவில் அமைதியின்மை, கெட்ட கனவுகள், வயிற்றுப்போக்கு, வாய் நாற்றம், கண்களின் கீழ் அடர்த்தியான கரு வளையங்கள் எப்போதும் உணவு உண்ண வேண்டும் என்ற ஆவல் மிகுதல் போன்றவை. சிலவகை குடல் ஒட்டுயிரிகளின் பிடியிலிருந்து விடுபட பூண்டு உண்பது துணை நிற்கிறது. குடற்புழுக்களுக்கு வெற்றிகரமான மருத்துவம் செய்தபின் முழுமையான உடல் தூய்மையைப் பின்பற்றினால் தான் மீண்டும் இத்தொல்லை உண்டாகாது.

மருத்துவம்

இரத்த சோகையைத் தடுப்பது எளிது. வந்த பின்னால் சரி செய்வது கடினம். வளரும் வயதுகளிலேயே இரும்புசத்தை தாராளமாக உணவில்

இரத்த சோகை என்றால் இரத்தம் போதிய அளவு இல்லை என்று பொருள். இது மக்களைத் தாக்கும் மிகச் சாதாரணமான நோயாகும். இரத்தத்திற்குச் சிவப்பு நிறத்தை அளிக்கும் ஹீமோகுளோபின் எனப்படும் பொருளும், சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையும் குறைவதனால் இது உண்டாகிறது. இயறகை உணவுகளை விடுத்து, இயந்திர சாதனங்களால் சுத்திகரிக்கப்பட்ட உணவுகளை உண்பதால் இரத்தசோகை உண்டாவது வழக்கம்

சேர்த்துக்கொள்வது, இரும்புச் சத்துப் பற்றாக்குறைவால் வரும் இரத்த சோகையைத் தடுக்க வெகு எளிய வழியாகும்.

இரத்த சோகைக்கான மருத்துவத்தில் உணவு மிக மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இரத்த சிவப்பணுக்களையும், ஹீமோ குளோபினையும் என்சைம்களையும் உருவாக்கத் தேவையான ஒவ்வொரு ஊட்டச்சத்தும் அவற்றின் இணைப் பாக்கத்திற்கு மிக மிகத் தேவை. வெள்ளை ரொட்டி, தீட்டிய அரிசி, சர்க்கரை, நொறுக்குத் தீனிகள் போன்ற இயந்திர சாதனங்களால் சுத்திகரிக்கப் பட்ட உணவுகள் உடலுக்குத் தேவையான இரும்புச்சத்தை திருடிச் சென்று விடுகின்றன. அனங்கக இரும்புச்சத்து உடலுக்குக் கெடுதல் செய்வதுடன் காப்பு பொருட்களான உயிர்ச்சத்துக்களையும் (வைட்டமின்கள்) செரிவற்ற கொழுப்பு அமிலங்களையும் அழித்து, கல்லீரல் சேதத்தை உண்டாக்கும் என்றும் கருவுற்ற பெண்களிடம் இயற்கையான கருச்சிதைவு உண்டாகும். குழந்தை குறை பிரசவத்திலோ அல்லது தாமதித்தோ பிறக்கும் என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இரும்பு சத்தை இயற்கை வடிவில் அங்கக இரும்புச் சத்துக்களாக மிகுந்த எளிய உணவுகள், கோதுமை, தானியக் கூலங்கள், பழுப்பு அரிசி, தவிடு, முட்டைக்கோசு, கேரட், பீட்ரூட், தக்காளி, பசலைக்கீரை போன்ற காய்கறிகள், ஆப்பிள், நாவல், களாப்பழம் போன்ற சிறு பழங்கள், சொர்ரி, திராட்சை, அத்தி, பேரீச்சை, பேரி, பீச், தேன், வெல்லம் இன்ன பிற. இவ்வுணவுகள் புரதம் மிகுந்தவையாகவும் உயிரியல் ரீதியாக மதிப்பு மிகுந்தவையாகவும் உள்ளன. இவை பால் பாலடைக்கட்டி போன்றவற்றிற்கு இணையாக ஊட்டமுடையவை. ஹீமோகுளோபின் உருவாக்கத்திற்கு இரும்புச்சத்தை பயன்படுத்திக் கொள்ள செம்புச் சத்தும் மிக இன்றியமையானதாகும்.

இரத்த சோகையைத் தடுப்பதற்கும் குணமாக்குவதற்கும் வைட்டமின் பி12 கண்டிப்பாகத் தேவை. இவ்வைட்டமின் விலங்குப் புரதத்தில் குறிப்பாக சிறுநீரகம் கல்லீரம் போன்றவற்றில் காணப்படுகிறது. அதிக இறைச்சி உணவு உண்பதால் அதிக அளவு இரத்த சிவப்பணுக்களும் ஹீமோகுளோபினும் உற்பத்தியாகின்றன. எனினும் சில தனிப்பட்ட தீமைகள் உண்டு. குடலில் பொருள்கள் அழுகி கெட்டு விடுவதும் இரத்த சோகைக்கான இன்னொரு காரணம் ஆகும். அதிக இறைச்சி உணவு உண்பதால் இந்நிலை உண்டாகிறது. மேலும் விலங்குகளிடையே நிறைய நோய்கள் பரவி வருகின்றபடியால் எல்லா விலங்குகளிடையே நிறைய நோய்கள் பரவி வருகின்றபடியால் எல்லா விலங்கு உணவுகளுமே பல்வேறு நோய்களை கொண்டு வரும் அபாயத்தை யுடையவை. எனவே வைட்டமின் பி12ஐ தரும் மாற்று உணவுகளான பால்பண்ணைப் பொருட்கள் – பால், தயிர், பாலடைக்கட்டி, நிலக் கடலை,வெண்ணெய் போன்றவற்றை நாட வேண்டும்.

கோதுமையிலும் சோயா பீன்சிலும் வைட்டமின் பி12 காணப்படுகிறது. மரக்கறியுணவாளர்கள் போதுமான அளவு பாலை அருந்தி, பால் உற்பத்திப் பொருட்களையும் உண்டு வர வேண்டும். இரத்த சோகையைத் தவிர்க்க பி காம்ப்ளக்ஸ் மாத்திரிகளை எடுக்க வேண்டும். அதில் பி12லும் அடங்கியிருக்கும். மேலே குறிப்பிட்ட இயற்கை உணவுகளையும் உண்டுவர வேண்டும்.

இரும்புச் சத்து உட்கவரப் படுவதற்குப் போதுமான அளவு அஸ்காரிக் அமிலம் உட்கொள்வதும் தேவையே. அஸ்காரிக் அமிலம் செறிந்த எலுமிச்சை வகைப் பழங்களையும் பிற பழங்களையும் நாள்தோறும் சிறிதளவு உண்டு வரவும் வேண்டும்.

இரத்த சோகையை குணமாக்குவதற்கு பீட்ரூட் உண்பது மிக அவசியம். பீட்ரூட் சாற்றில் பொட்டாசியம், பாஸ்பரஸ், கால்சியம், கந்தகம், அயோடின், செம்பு, கார்போஹைட்ரேட் (மாவுப் பொருள்) புரதம், கொழுப்பு, வைட்டமின் பி1, பி2, நியாசின் பி6, வைட்டமின் சி, வைட்டமின் பி, (P) போன்றவையும் அடங்கியுள்ளன. பீட்ரூட் சாற்றில் இரும்புச் சந்து அதிகமாக அடங்கியுள்ளபடியால், இரத்த சிவப்பு அணுக்களை மறு உற்பத்தி செய்து, மீண்டும் செயல்படத் தோன்றும். உடலுக்கு புத்தம் புதிய உயிர்க் காற்றை (ஆக்சிஜன்) வழங்கி உடலின் இயல்பான இயக்கத்துக்கு வழிவகுக்கும்.



நீர் மருத்துவம்

இரத்த சோகையை குணமாக்குவதில் குளிர்ந்த நீர்க் குளியல் மிகவும் பயனுள்ளதாகும். நோயாளிக்கு நாள்தோறும் இரண்டு தடவைகள் கவனமாக குளிர்ந்த நீர்க் குளியல் தரவேண்டும். குளிர்ந்த நீரும் எப்சம் உப்பு கலந்த வெந்நீரும் என மாற்றுக் குளியல் வாரம் ஒருமுறை 5-10 நிமிடங்கள் தரவேண்டும். எப்போதாவது நீராவிக் குளியல் எடுப்பதும் நலம். சூரிய ஒளி இரத்த சிவப்பு அணுக்களின் உற்பத்தியைக் கிளர்த்திவிடுவதால் முழுமையான சூரியக் குளியல் எடுப்பதும் நல்லது. உடலுக்குப் பொதுவான மசாஜ் தருவதும் உணவிலிருந்து இரும்புச் சத்தை உட்கவரச் செய்ய உதவும்.

இரத்த சோகையை குணமாக்குவதற்கு உதவும் வேறு முக்கியமான காரணிகளும் உள்ளன. ஆழ்ந்து மூச்சு விடுதலும், நடத்தல் போன்ற இலேசான உடற்பயிற்சிகள்; பிற எளிய உடற்பயிற்சிகளையும் செய்வது உடல் வலிமையைப் பெருக்கத் துணை நிற்பவை.

– நன்றி : நல்வழி

பனை

கலைவளன் சிசு. நாகேந்திரன்

பனைமரத்துக்குக் **கற்பகத்தரு** என்று இன்னாரு பெயரும் உண்டு. அதாவது வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களையெல்லாம் அது கொடுக்கும் என்பது விளக்கம். பழுத்து விழுந்த பணம் பழத்திலிருந்து பல உணவுப பண்டங்கள் கிடைக்கும். (நாட்டில் **பனங்காய்** என்று சொல்வது வழக்கம்). பனம்பழத்தின் தோலை நீக்கிவிட்டுத் தண்ணீரும் சேர்த்து அதன் தசையைக் கசக்கி கழிகறந்து, அந்தக் கழியைச் சிறிய பனைஓலைப் பாய்களில ஊன்றிப் பரப்பிவிடுவார்கள். அது காய்ந்ததும் பாயிலிருந்து பிரித்தெடுத்து, துண்டுதுண்டாக வெட்டி ஒரு மட்பாத்திரத்திற் போட்டுப் பத்திரப்படுத்தி வைப்பார்கள். அதற்குப் பெயர் **பனாட்டு**. சில நாட்கள் செல்ல அந்தப் பனாட்டு மிகவும் ருசியாக இருக்கும். பசியையும் பிடிக்கும், உடம்புக்கும் நல்லது. பிழிந்த பனங்கழியுன் மாவும் சேர்த்து பனங்காய்ப் பணிகாரம் செய்து பொரித்துச் சாப்பிட ருசியாகவிருக்கும். பனாட்டில் **பாணிப்பனாட்டு** என்றொரு வகையும் உண்டு.

சாறுபிழிந்தபிறகு பனம்பழத்தின் விதைகளை வீசிவிட மாட்டார்கள். அவற்றைச் சேர்த்துவைத்து ஒரு ஐம்பது, நூறு சேர்ந்ததும் மண்ணைக் கிண்டிப் பதப்படுத்தி மேடைபோட்டு இந்த விதைகளைப் பரப்பி அதன்மேல் மண்ணைப் போட்டு மூடிவிடுவார்கள். இதற்குப் **பனம்பாத்தி** என்று பெயர். 4, 5 மாதங்கள் சென்றதும் அந்த விதைகளிலிருந்து கிழங்குகள் பூமிக்குள் கீழ்நோக்கி வளர்ந்திருக்கும். காலமறிந்து மக்கள் அந்தப் பாத்திகளைக் கிண்டி கிழங்குகளை எடுத்துத் தோலை உரித்து விட்டு உணவுக்காகப் பாவிப்பார்கள். பனம்பாத்தியைக் கிண்டி கிழங்குகளை எடுக்காவிட்டால், அவை குருத்து முளைத்து இலையாகி, கன்றாகி, வடலியாகிப் பின்னர் நெடிய பனைமரமாக உயர்ந்து வளர்ந்துவிடும். அந்தக்கிழங்கு, பனையின் ஆணிவேராக மாறிவிடும். பனம் விதைகளைத் தாட்டுவிட்டுச் சில காலஞ் செல்லக் கிண்டி எடுத்து அவற்றை வெட்டிப்பார்த்தால் உள்ளே பூரான் நிறைந்திருக்கும்.பூரான் சாப்பிட நல்ல ருசியானது. இந்தப் பூரான் சிலநாட் செல்லக் கிழங்காகவும் அதன் பின்னர் ஆணி வேராகவும் பரிணமிக்கிறது. (முறையே நுங்கு, சீக்காய், பூரான், கிழங்கு ஆணிவேர்) பனைமரங்களின் வயது மனிதரின் சராசரி வயதிலும் பார்க்கக்கூடியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிண்டி எடுத்த பனங்கிழங்கை நெருப்பில் சுட்டும் சாப்பிடலாம்; அவித்தும் சாப்பிடலாம். அவித்த கிழங்கை குந்து நீக்கி, உப்பு, மிளகு, தேங்காய், மிளகாய் சேர்த்துத் துவையல் செய்து சாப்பிட உவப்பாயிருக்கும். அல்லது அவித்த கிழங்கை இரண்டாகப் பிளந்து, ஒரு பாயில் பரப்பி வெயிலில் நன்றாகக் காய விட்டு எடுத்தால் அதற்குப் **புளுக்கொடியல்** என்று பெயர். புளுக்கொடியல் மாதக்கணக்கில் பழுதாகாமல் இருக்கும். பனங்கிழங்கை அவிக்காமல், அப்படியே இரண்டாகப் பிளந்து, பாயிற்பரப்பி நன்றாக காய்ந்தபிறகு எடுத்துவைத்தால் அதை **ஒடியல்** என்று சொல்வார்கள். ஒடியலையும் கனகாலத்துக்குக் கெட்டுப் போகாமல் வைத்திருக்கலாம். தேவையேற்படும்போது ஒடியலை உரலில் மாவாக இடித்து அந்த மாவைக்கொண்டு புட்டு அவிப்பார்கள். (ஒடியல்புட்டு !) ஒடியல்மாவுடன் காய்கறி, பலாக்கொட்டை சேர்த்து ஒடியல்கூழ் காய்ச்சுவார்கள். மச்சமும் சேர்த்துக் காய்ச்சினார் அது மச்சக்கூழ்.

பனையில் காய்த்த பிஞ்சு, பின்னர் காய்ப்பருவமாக மாறிப் பனையிளங்காய் ஆகும். அதன் மேற்பக்கத்தை அரிந்தால் அதில் கண்வடிவத்தில் மூன்று (சிலதில் இரண்டு) இளநுங்கு தெரியும். அவற்றை ஒவ்வொன்றாகத் தோண்டிச் சாப்பிடுவார்கள். பனையிளங்காயின் மேல்பக்கத்தில் சுற்றிவரக் கவிழ்த்து மூடி அடுக்கி ஒட்டிவிட்டடி பணிவில் இருக்கும். நுங்கைக குடிப்பதற்குச் சீவுமுன்னர் இந்தப் பணிவிலில் ஒன்றைப் பிடுங்கி எடுத்து, நுங்கு கண்ணில் பெருவிரலை நுழைத்துத் தோண்டி பணிவிலுக்குள் ஊற்றிவிட்டு அப்படியே லோசக் குடிக்கலாம். காய் கொஞ்சம் முற்றி நுங்கு கடினமாகிவிட்டால் அதன் பெயர் **சீக்காய்**. அதைச் சாப்பிட சிலர் விரும்ப மாட்டார்கள். இந்த நுங்குதான் பனங்காயை விதைத்த சில நாட்களில் பூரானாக மாறி பின்னர் கிழங்காக நிலத்தினுள் விளையும்.

பனப்பாளை, அதாவது விரியாத பனம்பூவிலிருந்து, கள்ளு தயாரிப்பார்கள். பெண்பனையில் ஏறி, பாளையின் மடல்கள் முற்றி விரியுமுன்னர் அதைச் சுற்றிக் கட்டிவிடு இறங்கிவிடுவார்கள். பின்னொரு நாளில் பாளையைத் தட்டுப் பொல்லால் தட்டித்தட்டிப் பதப்படுத்திய பிறகு, பாளையின் நுனிப்பகுதியில் ஒரு முட்டியைக் கட்டிவிட்டதும் கள்ளு அதனுள்



சொட்டுச் சொட்டாக வடியும். முட்டி கட்டும்போது, எலி அல்லது அணில் ஏறிக் கள்ளைக் குடித்துவிடாதபடிக்கு முட்டியை மறைத்து ஓலையால் சுற்றிக் கட்டிவிடுவார்கள். ஆண்பனையின் பாளை பூம்பாளைதான். பனைமரத்தில் எல்லோரும் துணிந்து ஏற முடியாது. அதற்கென்று ஒருசாரார் பழக்கப்பட்டிருக்கிறார்கள். (அவர்களுக்கு **நளவர்** என்று தமிழ்ச்சமுதாயம் பெயர் சூட்டியிருக்கிறது. குறைந்த சாதிக் காரர்களுள் அவர்களும் ஒன்று.) ஏறும்பொழுது வழுக்கி விழாதபடிக்கு இரண்டு கணைக்கால்களையும் சுற்றித் **தளைநார்** வளையமாகப் போட்டுக் கொண்டு பனையில் பயந்து பயந்து ஏறி, கள்ளுச்சீவி, அடுத்தநாள் முட்டியில் சேர்ந்த கள்ளை இறக்கிவந்து தனி மனிதர் பாவனைக்கு அல்லது தவறணைக்குக் கொடுப்பார்கள். கள்ளுகுடித்தால் வெறிக்கும். அந்தப் போதையை பலபேர் விரும்புவதால் கள்ளுக்கு நல்ல கிராக்கி. நல்ல விலை போகும். கள்ளு குடிப்பவர்களை நல்ல மனிதர் மதிப்பதில்லை. ஏனெனில் குடித்தவன் வெறியில் (போதையில்) செய்வது என்னவென்று தெரியாமல் தீங்குகள் இழைத்துவிடுவார்கன். கள்ளைக் குடிப்பதற்குரிய பாத்திரம், பனை ஓலையைக் கோலி இருபக்கமும் கூட்டிக்கட்டி எடுத்த பிளாவைத்தான் பாவிப்பார்கள். கள்ளுமுட்டியின் உட்பக்கமாகச் சுண்ணாம்பைப் பூசிப் பாளையில் கட்டிவிட்டால் அதில் ஊறும் கள்ளு கருப்பநீர் என்றொரு பானமாக மாறும். **பதநீர்** என்றும் சொல்லலாம். அது இனிக்கும். குடித்தாலும் வெறிக்காது. பனங்கள்ளிருந்து சாராயம் (Arrack) என்னும் குடிவகைகூடக் காய்ச்சலாம். கள்ளைச் சேர்த்து வடிசாலைக்கும் (Distillery) அனுப்புவார்கள். அங்கு அந்தக் கள்ளிலிருந்துதான் சாராயம் காய்ச்சுவார்கள். பொதுவில், குடிவகை எதுவாயினும் அது உடம்புக்குக் கெடுதி செய்யும் பானம் என்பது எனது கருத்து.

இனி, பனைமரத்தின் பிரயோசனங்களைக் கவனிப்போம். பனைமரம் கிளைகலில்லாமல், நெடிதாக, சராசரி 50, 60 அடி உயரத்துக்கு வளரும் ஒரு மரம். மற்றைய மரங்களை விட வித்தியாசமானது. நீண்ட ஒரு கரியகம்பம் போன்ற மரத்தின் நுனியில் வட்டமாக ஓலைகள் முளைத்திருக்கும். இவைதான் பனையின் இலைகள். ஒரு மீட்டர்வரை நீளமுள்ள (காம்பு) மட்டையின் நுனியில் ஒவ்வொரு ஓலையும் இருக்கும். ஆங்கிலத்தில் என்று சொல்லும் வர்க்கத்தைச் சேர்ந்தவை தான் பனையும் தென்னையும். பனை மரத்தின் நிறம் கறுப்பு. மரம் அதன் மட்டை; ஓலை யாவும் மிகவும் வைரமானவை. கெதியலில் உக்கிப்போகாதவை. பனையின் வட்டுக்குள் காணக் கூடியவையாவன - **பன்னாடை, பனம்பூ,** (பாளை) **கொக்காரை, கங்குமட்டை, நுங்கு, பனங்குருத்து** (முளைத்துவரும் பிஞ்சு பனை ஓலை) முதலியன. பனைமரம் மிகவும் பலம் வாய்ந்தது. உறுதியானது. காற்றுக்கு மழைக்கு முறிந்துவிடாது. பனைமரம் வீடுகள், கட்டிடங்கள் கட்ட மிகவும் பிரயோசனமானதொன்று. பனையைத் தறித்து வீழ்த்திவிட்டு, ஆப்பு வைத்து அதனைக் கிழித்து, அதன் தோல் சிலும்பல், சிராம்பு, சாதா முதலியவற்றை வாச்சிகொண்டு சீவி நீக்கிவிட்டால் மிஞ்சுவது நல்ல வைரமான மரம். பின்னர் தச்சர் (மரவேலை செய்பவர்கள்) தங்கள் தேவைகளுக்கேற்ப இந்தச் சுத்தம் பண்ணிய மரத்தை துண்டுகளாக நறுக்கி எடுத்துக் கொள்வார்கள். இவற்றிலிருந்து வீடு கட்டுவதற்கு வேண்டிய பலவிதப் பொருட்களை வெட்டி, சீவி எடுப்பார்கள். அதாவது வீடு கட்ட அவசியமான **கப்பு, வளை, தீராந்தி, சிலாகை** முதலியவற்றை அளவுக்கும் பிரமாணத்துக்கும் தக்கதாக வாளால் வெட்டியும் சீவுளியால் சீவியும் பாவிப்பார்கள். இந்த வேலைகளுக்கு உதவக்கூடியதாக, மிகவும் உரமானதும் உறுதியுமான பனையாகப் பார்த்துத்தான் தறிப்பார்கள். ஏனெனில் சாதா, சோத்தி உள்ள பனைமரங்களில் வைரமான பகுதி இருக்காது. அவை பாவனைக்கு உகந்ததல்ல. இதைவிட கிணற்றில் தண்ணீர் மொள்ள உதவும் **துலாவும், பேண்மரம், நென்பு, அச்சுலக்கை** முதலியவை செய்வதற்கும், வேறு வேறு மரம் சம்பந்தப்பட்ட தேவைகளுக்கும் பனைமரம் உதவும். அத்துடன், பனை மரத்தை அப்படியே பாதியாகப் பிளந்து அப்பாதிகளைக் கவிழ்த்துப் பரப்பி அடுக்கி, எல்லாவற்றையும் ஒன்றாகத் தொடுத்து விட்டால் அது நீரோடை முதிலியவற்றை கடக்க உதவும் ஒரு பாலமாகவும் அமையும். பனைமரத்தை துண்டாக்கி நட்டு, படலைத் தூண்களாகவும் பாவிப்பார்கள். பனைமட்டைகளை ஒரே அளவில் நறுக்கி வைத்துக் கொண்டு வேலி அடைக்கவும், அடுப்படியை மறைத்து மட்டைச்சுவர் கட்டவும், மறைவுத் தட்டிகள் தயாரிக்கவும் பாவிப்பார்கள்.

இவை மட்டுமல்ல, வேலி அடைக்க உதவும் குத்தூசி, கைக் கோடாரிப்பிடி, வாச்சிப்பிடி, உலக்கை, சிறுசிற்பங்கள், அழகுப் பொருட்கள், சில தளபாடங்கள் இப்படிப் பலவிதமான உபயோகப் பொருட்கள பனைமரத்திலிருந்து செய்வார்கள். பனைமட்டையிலிருந்து உரிக்கும் நாரும் சில தேவைகளைப் பூர்த்தி செய்யும். உதாரணமாக ஆடு, மாட்டுக்கு கழுத்துக் கண்ணிகள் செய்வதற்கு நார்தான் பலமானது. தீரிந்து போகாமல் நின்றும் பிடிக்கும்.

பனையின் ஓலையிலிருந்து எத்தனையோ பொருட்களைச் செய்வார்கள். குருத்துப் பருவத்திலிருந்து முற்றி ஓலையாக வருமுன்னர் அதற்கு சார்வு என்று பெயர். பனையிலேறி, வட்டுக்குள் இருக்கும் சார்வை வெட்டிக் கொண்டுவந்து, **மூரியை** வெட்டித் தள்ளிவிட்டு, அதை காயவைத்து (பதப்படுத்தி) எடுப்பார்கள். மெதுமையாக இருந்த சார்வு காய்ந்ததும் பலம் ஏறி விசிறிபோல விரியக்கூடிய ஓலை ஆகிவிடும். அதை **பன்னஓலை** என்பார்கள். அந்த ஓலையை பக்குவமாக ஈர்க்கு தள்ளி, **காம்புச் சத்தகம்** பண்ணி, கீலம் கீலமாக வார்ந்து எடுப்பார்கள். (காம்பு சத்தகத்துக்குப் பன்னச் சத்தகம் என்றும் ஒரு பெயருண்டு. அது நீண்ட மெல்லிய பிடியுடன் கைக்கு அடக்கமாக, வளைவான ஒரு கத்தி) கீலகங்களாக ஓலைகயை வாரும்போது, அகலமாகவோ மெல்லியதாகவோ, தங்கள் தேவைகளைப் பொறுத்தே, வாருவார்கள்.

தனிய பன்ன ஓலையை மட்டும் பாவித்து பெட்டி பாய், (புட்டவிக்க) நீத்துப்பெட்டி, தட்டி, தடுக்கு, கூடை, பணங்கட்டி போடும் குட்டான் வகைகள், குருவி, தேர், கிலுகிலுப்பை முதலிய குழந்தைகள் விளையாடும் பொருட்கள், விசிறி முதலிய எத்தனையோ பொருட்களை இழைப்பார்கள். பல வர்ணங்கள்

பூசிய சாய ஓலைகளால் மேற்சொன்ன பொருட்களை செய்து கண்ணுக்குக் கவர்ச்சியாக வைப்பார்கள். (ஒருவிதப் புல்லை பாவித்தும் புற்பாய் இழைக்கலாம்.) பன்ன ஓலையையும் (பனை மட்டையிலிருந்து உரித்தி) நாரையும் சேர்த்துச் சில பொருட்களைச் செய்வார்கள். தண்ணீர் இறைக்கும் பட்டை, நார்க்கடகம், பெரிய கூடை, தட்டி, உமல் (பை) முதலியன இவற்றுள் அடங்கும். ஓலையிலிருந்து வார்ந்து எடுத்த பனை ஈர்க்கிலிருந்து (ஓலை, நார் இவற்றைச் சேர்த்தும் சேர்க்காமலும்) பல சாமான்கள் உற்பத்தியாகும் – அவை, வடக்கயிறு, உறி, திருவணி, கட்டை விளக்குமாறு முதலியன.

பனைஓலை **விசிறி** எப்படிச் செய்வார்கள்? பனங்குருத்து ஓலையாக விரியுமுன்னர் மடிப்புமடிப்பாக சுருங்கி மெல்லியதாக இருக்கும். அதை வெட்டி வந்து; பாதியாகக் கிழித்து, ஒரு பாதியை எடுத்து நன்றாக விரித்து, விரித்தபடியே மணலைக் கிண்டி அடியில் வைத்து மணலால் மூடிவிட்டால் சில நாட்களில் மடிப்புகள் எடுபட்டு விரிந்துவிடும். பின்னர் அதை வட்டமாக வெட்டி, ஈர்க்கினால் விளிம்மைச் சுற்றிவர கட்டி எடுத்ததும் அது நல்ல விசிறியாகும். அதன் சிறிய மட்டையே விசிறியின் கைப்பிடியாகும். பனைஈர்க்கினால் நீளமாக கூடு இழைத்த அதை வெங்காயத்தை சந்தைப் படுத்துதற்கும், சிறுது காலம் சேமித்து வைப்பதற்கும் பயன்படுத்துவார்கள. வெங்காயக் கூட்டைப் பார்த்தால் அது தூக்கணாங்குருவியின் கூடு போன்று தோற்றமளிக்கும்.

கடுதாசித்தாள் பாவனைக்கு வராத பழைய காலத்தில் பனைஓலைகளின் ஈர்க்குகளை நீக்கிவிட்டி, ஓலையை 2 அங்குல அகலம் 10 அங்குல நீளத் துண்டுகளாக வெட்டி வைத்துக் கொண்டு அவற்றின் மேல் எழுத்தாணி கொண்டு எழுதி அதையே புத்தகமாக பாவித்தார்கள். இந்த ஏட்டுச் சுவடிகள் எத்தனையோ நூற்றாண்டுக் காலத்துக்கு அழியாமலிருக்கும் தன்மைவாய்ந்தது. ஆதிகால முனிவர்கள், ரிஷிகள், வைத்தியர்கள் இந்த ஏட்டுச் சுவடிகளில் எழுதிவைத்த பொன்னான விடயங்கள் பின்னர்வந்த சமுதாயங்களுக்கு மிகவும் பயன்படுகின்றன.

வீடுகளில் (கருப்பநீர்) பதநீரைக் காய்ச்சிப் பனங்கட்டி செய்வார்கள். இது குடிசைத் தொழில் ரீதியில் அடங்கும். அதைவிட, தொழிற்சாலைகளில் சர்க்கரையும் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும். உலகச்சண்டைக் காலத்தில், சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட சமயம் பனங்கட்டி நிறைய உதவிற்று. கரும்பிலிருந்து கற்கண்டு செய்வது போல கருப்ப நீரிலிருந்து **கல்லாக்காரம்** செய்வார்கள். இரு இருமலுக்கு இன்றியமையாத மருந்து.

பனம்பண்டங்கள் மனிதருக்கு மட்டுமல்ல, கால் நடைகளுக்குள் உதவுவதனால்தான் அவற்றிற்கு இவ்வளவு முக்கியத்துவம் வந்தது. மாடுகளுக்கு மிகவும் வேண்டிய உரு உணவு பனை ஓலை. அதை ஈர்க்குத் தள்ளி, கீலங்கீலமாக வார்ந்தெடுத்து மாட்டுக்கு தீனியாகக் கொடுப்பார்கள். பனம்பழத்தை மாடு நன்றாக நக்கி கழியை உட்கொள்ளும். நுங்கைக் குடித்தபிறகு நுங்குக் **கோம்பையைச்** சிறு துண்டுகளாக அரிந்து மாட்டுக்கு உணவாகக் கொடுப்பார்கள். சில ஆட்டுக்கடாக்களும் இதை உண்ணும்.

தங்கள் வளவில் பனைமரம் உள்ளவர்கள் அடுப்பு எரிக்கத் தேவையான விறகுக்கு வேறு எங்கும் போகத் தேவையில்லை. ஓலை முதற்கொண்டு பனைமரத்துண்டுகள் ஈறாக எல்லாப் பனம் பொருட்களும் அடுப்பெரிக்க உகந்தனவாகும்.

பனங்கள்ளைக் குடித்து, அதனால் வெறியேறி, சொர்க்கத்தில் இருப்பதுபோல உணர்ச்சி கொண்டு திரிந்தவர்கள் பல பேர். கள்ளுக்குடி பழக்கமுள்ளவர்கள் அநேகமாக ஆண்களே. ஆனால் பெண்களும் மரத்திலிருந்து கள் இறக்குபவரிடம் கேட்டு வாங்கி வீட்டுக்குக் கொண்டு போவார்கள். அதை குடிக்கவல்ல ! அடுத்த நாள் அப்பம் சுடுவதற்கு மாவைப் புளிப்பேற்றுவதற்காகவே பெண்கள் கள்ளை பாவிப்பார்கள். கள்ளைக்குடிக்கும் பழக்கம் குடிப்பவருக்கும் சமூகத்துக்கும் கேடு விளைவிக்கக் கூடியது என்று தெரிந்தும் இலங்கையில் பிரிட்டிஷ் அரசாங்கமும் அதன்பிறகு வந்த அரசாங்கங்களும் கள்ளைத் தயாரிப்பதையோ குடிப்பதையோ தடைசெய்யச் சட்டம் ஏற்படுத்தவில்லை. அதனால் எத்தனையோ குடும்பங்கள் கஷ்டத்துக்கும் வறுமைக்கும் உள்ளாகி அலைத்துலைந்து போனது கண்கூடு.

நன்றி : அந்தக் காலத்து யாழ்ப்பாணம்

Chellappa & Co. Ltd.

LEGAL CONSULTANCY, ACCOUNTANCY & TAX SERVICES

Legal : We have expertise with many years experience in providing excellent advise and assistance in respect of all legal matters including civil litigation.

பல வருட அனுபவமும் திறமையும் உள்ள சட்ட ஆலோசகர்களினால் சகலவிதமான சட்டத் தேவைகளுக்குமான ஆலோசனைகளை வழங்குவதுடன், அதற்கான உதவிகளையும் உங்கள் திருப்திகேற்ப சட்ட வரையறைக்குட்பட்டு மிகச் சிறந்த முறையில், குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து தரவுள்ளோம். எனவே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

Accountancy : We offer a fast, friendly and reliable accounting service for small and meidum sized businesses including preparation of VAT, TAX returns and Annual Accounts.

நீண்டகால அனுபவமும் தொழில் நுட்பமும் தெரிந்த கணக்காளர்களும், கணக்குப் பதிவாளர்களும், உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களின் கணக்கியல் சேவைகளை மிகத் துரிதமாகவும் நேர்த்தியாகவும் செய்து தருவதற்கு உடனே எங்களை நாடுங்கள்.

Special allowance will be given for start-up business, contact us for friendly advice

Mr K Chelva-Nayagam LLB
Manager
Mob : 07956 466 708
265 Haydons Road Wimbledon London SW19 8TY
Tel : 020 8542 7111 Fax : 020 8542 9770
Email: chellappa@tiscali.co.uk



புதிய பொலிவுடன் லூசியத்தில்

KATPAGAM

ஞாயிறு தோறும் உடன் பங்கு ஆட்டிறைச்சி
சகலவிதமான மரக்கறி வகைகள் பழவகைகள்
உட்பட சகல தேவைகளுக்கும்
நாடவேண்டியஒரே இடம்

துரிதப்
பணமாற்றுச்
சேவை
ரஞ்சன்
இலண்டன்

36, Loampit Hill, Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810



EVEREST
Curry King

Sea Food &
Vegetarian Specialist

Breakfast
Lunch
Dinner

24 Loampit Hall
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

VIDEO & AUDIO

14 Lompait Hill, Lewisham London SE13
Tamil, Malayalam, Hindi, Telugu Films,
Tele Drama Devotional Carrnatic,
Classical Cd's Tamil Magazines, News Papers, Phone Cards

புதிய நிர்வாகத்தின் கீழ்

Maharasie Jewellers

122 Loampit Vale
Lewisham
London SE13 7SN
Tel : 020 8691 8888

மங்கையரின் மனங்களைத்
தொள்ளை தொள்ளும்
நவநாகரீக நகைகளின்
தங்கச் சரங்கம்

மாசி மாதப்பலன் (பிப்ரவரி 15 - மார்ச் 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

மேடம் மயங்காதவர்களே ! பேச்சில் நிதானம் தேவை. குடும்பத்தில் செலவு அதிகமாகும். வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. அரசு காரியங்கள் உடனே முடியும். கல்யாணப் பேச்சு வார்த்தைகள் சுமூகமாகும். குடும்பத்தில் நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் தேங்கிக் கிடந்தவை விற்றுத் தீரும். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்யோகத்தில் செல்வாக்கு கூடும். வேலை கிடைக்கும். ஆடை, ஆபரணம் சேரும். நாவடக்கத்துடன் செயல்பட்டால் நன்மைகள் குவியும் மாதமிது.

இடபம் இங்கிதமாக பேசுபவர்களே ! அதிரடித் திட்டங்கள் தீட்டுவீர்கள். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் திணருவீர்கள். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். வேற்று மதத்தினரால் ஆதாயம் உண்டு. தாய்வழி சொத்துப் பிரச்சனை தீரும். வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் துணிந்து முதலீடுகள் செய்யலாம். உத்யோகத்தில் சம்பளமும், அலைச்சலும் கூடும். காதல் இனிக்கும். பழைய கடன் தீரும். குழப்பங்கள் விலகி குதூகலம் தங்கும் மாதமிது.

மிதுனம் இளகிய மனசுள்ளவர்களே ! பேச்சாற்றல் கூடும். ஒரே நேரத்தில் பல வேலைகள் வந்து முடியும். கொஞ்சம் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். அசைவ உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. கணவன் மனைவி உறவு இனிக்கும். வீடு, மனை வாங்குவது விற்பது லாபத்தில் முடியும். வியாபாரத்தில் போட்டிகளை கண்டறிந்து அதற்கேற்பத் திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்யோகத்தில் சம்பள பாக்கி கைக்கு வரும். உறவினர்கள் கூட்டம் அலைமோதும். சுபச் செலவுகள் சுற்றிச் சூழும் மாதமிது.

கடகம் கண்ணியவான்களே ! கணவன் மனைவிக்குள் நிலவி வந்த பனிப்போர் குறையும். வாகன, வீடு பராமரிப்புச் செலவுகளும் கட்டுப்பாட்டுக்குள் வரும். மன உளைச்சல், தூக்கமின்மையிலிருந்து விடுபடுவீர்கள். பிள்ளைகளுக்கு திருமண, உத்யோக முயற்சிகள் வெற்றியடையும். வியாபாரத்தில் உங்களின் அதிரடித் திட்டங்கள் நல்ல லாபம் தரும். ஏற்றுமதி, இறக்குமதி வகைகளில் ஆதாயம் உண்டு. உத்யோகத்தில் சலசலப்புகள் வந்து போகும். திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். பிற்பகுதி இனிக்கும் மாதமிது.

சிம்மம் சிந்தனைச் சிற்பிகளே ! அலைச்சல் விலகும். குடும்பத்தில் பணவரவு அதிகரிக்கும். பெற்றோரின் உடல் நலம் சீராகும். வருங்காலத் திட்டங்கள் வெற்றியடையும். சகோதர, சகோதரிகள் உதவுவார்கள். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். வேலை கிடைக்கும். காதல் இனிக்கும். வாகன விபத்து வந்து போகும். உத்யோகத்தில் இடம் மாற்றம் உண்டு. வியாபாரத்தில் நல்ல வேலையாட்கள் பணிக்குத் திரும்புவார்கள். மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வழக்கு சாதகமாகும். சிக்கல்களிலிருந்து விடுபடும் மாதமிது.

கன்னி கற்பனைவாதிகளே ! சூரிய பலத்தால் முடிக்க முடியாததையெல்லாம் சாதிப்பீர்கள். பணப்பற்றாக்குறை தீரும். சொத்து வாங்குவீர்கள். அணிகலன்கள் சேரும். பிள்ளை பாக்யம் உண்டாகும். திருமணத் தடை நீங்கும். லாட்டரி மூலம் பணம் வரும். அரசாங்க அதிகாரி உதவுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். உத்யோகத்தில் பரிசு, பாராட்டு உண்டு. அதிர்ஷ்ட தேவதை அணுகும் மாதமிது.

துலாம் துணிவானவர்களே ! நிதானம் தேவை. அவசர முடிவுகள் வேண்டாம். உடன் பிறந்தவர்களால் அலைச்சல் ஏற்படும். யாருக்காகவும் எதிலும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகள் அதிகமாகும். பற்று வரவு உயரும். ஆனால் பங்குதாரர்களிடையே கவனம் தேவை. உத்யோகத்தில் அதிகாரிகளுடன் அனுசரித்துப் போவது நல்லது. பழைய கடன் பிரச்சனையால் மனவருத்தம் ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. பொறுமை தேவைப்படும் மாதமிது.

விருச்சிகம் விபரமானவர்களே ! பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். பணவரவு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பூர்வீக சொத்தில் லாபம் கிடைக்கும். பிரபலமானவர்களால் கௌரவிக்கப் படுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் தேடி வரும். நல்ல வேலையாட்கள் கிடைப்பார்கள். உத்யோகத்தில் எங்கள் கை ஓங்கும். புது சலுகைகள் கிடைக்கும். ஆடை, ஆபரணம் சேரும். வீட்டில் சுபகாரியம் நடக்கும். எதிலும் ஏற்றம் பெரும் மாதமிது.

தனுசு தடைகளை தாண்டி வருபவர்களே ! நீண்டக் காலத் திட்டங்கள் இப்போது நிறைவேறும். மந்தம், மறதி நீங்கும். பணம் கேட்ட இடத்தில் கிடைக்கும். வேலை கிடைக்கும். அயல் நாட்டுப் பயணங்களும் கூடி வரும். வியாபாரத்தில் அதிரடி லாபம் உண்டு. புது ஏஜென்சி எடுப்பீர்கள். உத்யோகத்தில் எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். நல்ல வேலை கிடைக்கும். தாழ்வு மனப்பான்மை நீங்கும். பழைய கடன்கள் தீரும். குடும்பத்தில் மதிப்பு, மகிழ்ச்சி அதிகரிக்கும் மாதமிது.

மகரம் மகத்தான காரியங்கள் செய்பவர்களே ! வீட்டிலே மங்கல காரியம் நடக்கும். பிரபலங்களுடன் நட்பை புதுப்பித்துக் கொள்வீர்கள். ஆடை, அணிகலன்கள் சேரும். புதுத் திட்டங்கள் நிறைவேறும். பணத்தட்டுப்பாடு குறையும். வியாபாரத்தில் உங்கள் கை ஓங்கும். புரோக்கரேஜ், ஏஜென்சி வகைகள் லாபம் தரும். உத்யோகத்தில் வலுவடைவீர்கள். சம்பள பாக்கி கைக்கு வரும். பிள்ளைகளின் உயர்கல்வி, வேலை பிரச்சனைகள் தீரும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். தன்னம்பிக்கை சுடர்விடும் மாதமிது

கும்பம் குணவான்களே ! பணம் பல வழிகளில் வந்தாலும் செலவுகள் கூடும். பொன், பொருள் சேரும். கொஞ்சம் முன்கோபம், காய்ச்சல் வந்து விலகும். அம்மாவின் உடல் நிலை பாதிக்கும். உல்லாசப் பயணங்கள் சென்று வருவீர்கள். சொத்துப் பிரச்சினை தீரும். வியாபாரத்தில் விரும்பியபடி லாபம் உண்டு. அரசு சலுகை கிடைக்கும். வாகனச் செலவுக் குறையும். உத்யோகத்தில் முதலிடம் கிடைக்கும். சம்பளம் கூடும். வழக்கில் வெற்றி உண்டு. பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். வெற்றிப்படியில் பயணிக்கும் மாதமிது.

மீனம் ஆன்மீகவாதிகளே ! தடைகள் உடைபடும். தொட்டதெல்லாம் துலங்கும். பணம் பல வழியிலும் வரும். சேமிக்க முடியாது. குடும்பத்தில் சண்டைச் சச்சரவு நீங்கும். பொன், புகழ் சேரும். சகோதரி உதவுவார். காதல் இனிக்கும். சொத்து சேரும். புது உத்யோகம் கிடைக்கும். வெளிநாட்டுப் பயணங்கள் விரும்பியபடி நடக்கும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்யோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் யாவும் பூர்த்தியாகும் மாதமிது.

Link AIR Travels Limited

ATOL 5047 PROTECTED

IATA 91 2 5704 0

SriLankan

Special Fares to : Colombo, Madras, Singapore, Canada

We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO

361 London Road, Croydon, Surrey CR0 3PB
Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579

இலண்டன் மாநகரில்

Galaxy News

84, Brooks Croft Road
London E17 4JR
Tel : 07958 360 176
Fax : 020 8527 2324

தொடர்புகளுக்கு
K. Alagan

உங்களுக்குத் தேவையான விரும்பிய நூல்களை
ஒடருக்கு உங்கள் வீட்டுக்கு அருகாமையில்
உள்ள தமிழ்க் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்

Mierra Jewellery Mart

Gems & Jewellery

34 London Road Tooting London SW 17 9SP
Tel : 208 648 7750
www.meera_jewellery.com

பழைய தங்கத்தில்
புத்தம் புதிய நகைகள்
செய்து கொள்ள,
அதிர்ஷ்ட நவரத்தின
கற்களை நியாய
விலையில்
பெற்றுக்கொள்ள,
உங்களுக்குத்
தேவையான 22ct
சிங்கப்பூர் நகைகளை
நியாய விலையில்
உடனுக்குடன்
பெற்றுக்கொள்ள

இந்த்ரா செபஸ்தியன் சட்டத்தரணிகள்

1 Central Parade, Station Road, Harrow, Middlesex HA1 2TW

IMMIGRATION

குடிவரவு தஞ்சம் கோருவோர் விண்ணப்பம் (asylum)
கல்வி /தொழில் / உயரிர்தொழில்நுட்பம்
(work permits / HSMP / SEGS / SBS)
வியாபாரப்புலம்பெயர்தல் (Business / innovator / investor)
பிரித்தானிய பிரஜாதாவுரிமை
பிரித்தானிய – இலங்கை இரட்டை பிரஜாவுரிமை!
(Dual citizenship)
திருமண அனுமதி விண்ணப்பம்
ஐரோப்பியர்களின் இருப்பிட விண்ணப்பம், மற்றும்
பிரித்தானியாவில் உறவின அகதிகள் Sponsor

PROPERTY

கடை / வீடு வாங்கல், விற்றல்
வீடு–கடை உரிமையாளர்– குடியிருப்பாளர் பிணக்குகள்
வியாபாரஸ்தாபன குத்தகை On & Off licence

வியாபார பிணக்குகள் – ஒப்பந்தங்கள்
Business disputes & All types of Agreements

கம்பனி உருவாக்கம் – பிணக்குகள் –
பாங்ரப்ட் (Bankruptcy)
சிவில் வழக்குகள்
குடும்பம் (Family) – தொழில் பிணக்குகள் (Employment)
உயில் எழுதுதல்
Charity & Trust Related Work

Intellectual Property / Information Technology

வியாபார இலச்சினை (Logo / Trade Mark)
எழுத்தாக்கம் – இசையாக்கம் (Copy rights)
வெப்சைட் – கொம்ப்யுட்டர்
விஞ்ஞான கண்டுபிடிப்புகள் (Patents)
.....பதிவுசெய்தல்

Tel : 0208 427 3303 **Fax : 0208 427 3313**

திருமணத் தகவல்

தமிழ்நாட்டில் பணிபுரியும்
MBBS படித்த பெண் டாக்டர்
வயது 26. ரோகிணி நட்சத்திரம்.
அவருடைய அப்பா தகுந்த
வரனைத் தேடுகிறார்
தொடர்பு : தமிழ்நாடு
91 44 26540600

யாழ்ப்பாணம் ரோமன் கத்தோலிக்க
மதத்தைச் சேர்ந்த லண்டனில்
வதியும் மணமகனுக்கு அவரின்
பெற்றோர்கள் தகுந்த வரனைத்
தேடுகிறார்கள்.
விபரம் அறிய தமிழர் தகவலை
தொடர்பு கொள்ளவும்.

இந்தப் பக்கத்தில் உங்கள் திருமணத் தகவல்
வெளியிட வேண்டுமாயின் தமிழர் தகவலைத்
தொடர்புகொள்ளுங்கள்.
முற்றிலும் இலவச சேவை

வான்புகழ் கொண்ட வள்ளுவம்

கலைஞர்

உழவு

இயற்கையாம் பெருந்தச்சன்
எண்ணிலாக் கோள்களைப் படைத்ததுடன்,

இவ்வுலகமெனும் திருத்தேரினில்
எழில் குலுங்கும் சோலைகளோடு,

எரிமலை, கடல், பள்ளத்தாக்கு என
அற்புதம் பலவற்றைச் செதுக்கி வைத்து,

ஆறுகளை அவற்றுக்கு ஆடையாகக் கட்டி விட்டு
அருவிகளை அதன் மீது ஆடுகின்ற தாவணிகளாக்கி.

அணிமணி அத்தனையும் நிறைவாகப் பூட்டிய பின்னர்
பல்வகை தொழில் புரியும் மாந்தர்தம் உழைப்பால்தான்

உலகமெனும் தேரின் பாகம் ஒவ்வொன்றும் உறுதிப் பெற்றுத்
திகழ முடியுமெனத் தெரிந்தும் கொண்டான்.

இடையிலோர் உடை நழுவும் நிலையும் ஏற்படாமல்
தடை விதித்து மானம் காத்திடவும்

இடையோட்டி எழிலாடை நெய்கின்ற தறியாளர்
எப்போதும் தப்பாமல் இருந்திடல் வேண்டுமென்றான்.

நாரின் பிடிப்பால்; – மலர் பயன் விளைக்கும் நறுமண
மாலையாகி; இந்த
நல்லதோர் உதவியினை எண்ணி வியந்து மகிழ்ந்து,

நாருக்கு நல் மணத்தை நன்றியுடன் தந்து
சிறந்தது – அப்போது
ஊருக்குள் ஓய்வு கொண்ட தச்சன் உள்ளத்தில்
ஓர் ஐயம் எழுந்தது.

உலகமெனும் கோளைச் செதுக்கி விட்டோம்
ஒப்பற்ற சிற்ப வேலைதனை முடித்து விட்டோம்.

மேலும் கீழும் பக்கலிலும் தேரின் பளு தாங்கி
ஆலம் விழுதின் உறுதி காட்டுதற்கும்

உலகத் தேர் ஓடி உருண்டு ஒழுங்கு மாறாமல்
ஒரு தொடியும் காலம் தவறாமல் நாழிகை காட்டுதற்கும்,

நடுவில் அச்சாணியாய் இத்தேருக்கு
நாம் யாரை பொருத்திடலாம் என

நல் தச்சன் நெஞ்சில் கேள்வி எழுந்த போது;
நாங்கள் இதோ இருக்கிறோம் – எங்கள்

தோள்கள் இருக்கின்றன வென்று,
தோழமைக் குரல் ஒலித்தது; ஆம்

தொகை தொகையாக உழவர் பெருமக்கள் குவிந்தனர்
பகை யென்று யாரையும் கருதாமல்

படை படையாகத் திரண்டு வந்தனர்
பார் முழுதும் பசி பட்டினி போக்கினர்.

நலம் சேர்த்தனர் – புதிய
பலம் சேர்த்தனர்

புவி மக்களை என்றென்றும்
காத்தனர் !

பெருந் தச்சனாய் மாறி,
அய்யன் திருவள்ளுவர் சொன்னார்

எந்தவொரு வேறுபாடுமின்றி
எல்லோரையும் தாங்குவதால் உழவரெனும்

நல்லோர் தான் உலகத்தாரைத் தாங்கும்
அச்சாணியாவார் என்று !

“ உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து ”

(பல்வேறு தொழில் புரியும் மக்களின் பசி போக்கிடும்
தொழிலாக உழவுத் தொழில் இருப்பதால், அதுவே
உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்)

அதிகாரம் : 104 குறள் : 1032

WEST CROYDON-ல்

Best Food

மலிந்த விலையில்
நிறைந்த
பொருட்கள்

259-261, London Road
West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 020 8686 4577

HARROW-வில்

Best Food

'சுகி சிவம்' அவர்களின்
அனைத்துப் புத்தகங்களும்
பெற்றுக்கொள்ளலாம்.

ரமணி சந்திரனின் புத்தகங்கள்
யாவும்

2 பவுண் மட்டுமே

249 Northolt Road Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

திருமண சேவை

ஏழில் நீசப்பட்ட செவ்வாயா ? எட்டில் சனி தோஷமா ? உதய இலக்கினத்தில் ராகுவா?... இதனால் கிரகபாவம் ஜாஸ்தியா?...

இனிக் கவலையே வேண்டாம் ! பாவக்கிரகங்கள் எந்நிலையிலிருந்தாலும் பொருந்தக்கூடிய சாதகக்குறிப்புகளைச் சுயதெரிவு முறையில் சுகமாகத் தெரிந்து எடுக்கலாம் ! சுயதெரிவு முறை பற்றிய மேலதிக விவரங்கள் பெற –

சுயதெரிவு முறை முன்னோடி, திருமண ஆற்றுப்படுத்துநர்
குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனை
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்!

தொலைபேசி தொடர்பு :
திங்கள், புதன், வெள்ளி நாட்களில்
இலங்கே நேரம் மாலை மணி 4.30 – 8.00 வரை
தொலைபேசி : 91 112 360488,
95 114 514 396

முகவரி :

Reputed Marriage Facilator,
'Self Selection System' Forerunner
Kurumpasiddyoor Mayelu Vel Amuthan
8/3/3, Metro Apartment
(Opposite Weelawatta Police, via 33rd Lane)
55th Lane, Colombo-06

HOUNSLOW-வில்

Best Food

364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

ரமணி சந்திரனின்
புத்தகங்கள்
யாவும்

2 பவுண் மட்டுமே



“ எந்த கலர் எந்த கலர் என்று உலகத்திற்கு
காட்டிவிட்டு நீங்கள் மட்டும்
கறுப்பு கலர் எடுத்து சென்று விட்டீரே ”

RMKV நிறுவனத்தின் அதிபர்
RMKV விஸ்வநாதன் அவர்களுக்கு
தமிழர் தகவலின்
இதய அஞ்சலி

உங்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்

தமிழ் நாடகத் துறையில்
கொடிகட்டி பறந்த
RS. மனோகர் கடந்த மாதம்
இயற்கை எய்தினார்.
சென்னையில் நீண்ட காலமாக
அவருடைய நாடகங்கள் சினிமா
பாணியில் நடைபெற்று வந்தன.
அவரது இழப்பு தமிழ் நாடகத்
துறைக்கு மாபெரும்
இழப்பாகும்.
யாழ்ப்பாணத்திற்கு
வந்திருந்தபோது அவருடன்
எடுத்த படம்.

மகத்துவமான மன்னிப்பு!

பொறையுடைமை

' குமுதம் ' இதழில் வெளியான ஒரு உண்மையான செய்தியின் பிரதிபலிப்பு இது. மனிதாபிமானம் – மன்னிப்பு அருகிப்போன இந்த இயந்திர யுகத்தில் இப்படி ஒரு நிஜக்கதை சமகாலத்தில் நடந்திருக் கிறது, உள்ளம் சிலிர்த்துப் போகிறது.

சர்வோதையத் தொண்டில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் கள் ஜெகநாதன் – கிருஷ்ணாம்பாள் தம்பதிகள். இவர்கள் ஆற்றிய பணிக்காக இந்திய நடுவன் அரசால் ' பத்மஸ்ரீ ' விருதுக்காக அழைக்கப் பட்டபோது, அடக்கத்தோடு அதை நிராகரித்து விட்டவர்கள் இவர்கள். சேவைக்காக விருது வாங்குவது அதன் புனிதத்தையும், ஆத்மா வையும் பாதித்துவிடும் என்ற கொள்கையுடையவர் ஜெகநாதன். இவர்கள் பற்றி ' புரட்சியில் பூத்த காந்தீய மலர்கள் ' என்று ஒரு நூல் வெளி வந்திருக்கிறது. அதில் வள்ளுவ வாழ்வு நெறி கொடிக் கட்டிப் பறக்கிறது.

1980ஆம் ஆண்டு தமிழகத்தில் எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலம். ஆர்க்காடு, தர்மபுரி மாவட்டங்கள் அனலாய் கொதித்து குமுறிக் கொண்டிருந்த நேரம். ' நக்சல்பாரி ' சார்பானவர்கள் என்ற குற்றச்சாட்டில், ஈவு இரக்கமின்றி தமிழ் நாட்டுக் காவல் துறையினரால் விசாரணையின்றிச் சுட்டுக் கொள்ளப்பட்டவர்கள் பலர். பல ஏழைக் குடும்பங்கள் தங்கள் ஆண் குழந்தைகளையும், குடும்பத் தலைவர்களையும் இழந்து பரிதவித்து நின்றன. பாதிக்கப்பட்டவர்கள் ஏழைகள், விவசாயிகள் வேறு தொழில் செய்து பிழைக்கத் தெரியாத வர்கள். இந்த துன்பச் செய்திகள் ஜெகநாதன் செவிகளுக்கு எட்டின. குற்றங்கள் என்று தண்டிக்கப் பட்டனர். ஆனால் குற்றங்களின் தன்மையும், அதன் காரணியும் ஆராயப்படவில்லை. இதைத்தான் ஜெகநாதன் அனுதாபத்துடன் பார்த்தார். ஏழ்மையும், கூலி உயர்வுக் கோரிக்கையும் வக்கிரமான சமுதாய அவலங்களும் வலைப்பின்னலாக உள்ளதை – அந்த சமுதாயம் அதனுள் உழல்வதை அவர் அவதானித்தார். அவருடைய நேர்மையான இதயம் நெகிழ்ந்தது. உடனே ஆபத்துகள் மிகுந்த மண்ணில் அவர் கால் பதித்தார். காவல்துறை தன் கவனத்தில் அவர் வரவை எடுத்துக் கொண்டது. பல உண்மைகள் வெளிவரப் போகின்றன என அது பயங்கொண்டது. அவர் வாயால் உண்மைகள் வெளிவந்தால் தாங்கள் நிச்சயமாக தண்டிக்கப்படுவோம் என்பது அவர்களுக்குத் தெரியும். அது சீற்றமானது.

ஜெகநாதனின் பாதயாத்திரை குண்டர் கோஷ்டி ஒன்றினால் தடுத்துத் தாக்கப்பட்ட செய்தி வெளியானது. ஜெகநாதன் அதில் படுகாயமடைந்தார். எனினும் அந்த வன்முறைக்கு எதிராக அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டார். இந்தச் செய்தி பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களால் நாடாளு மன்றத்தில் எடுக்கப்பட்டு பெரும் பிரச்சனையானது. உடனடியாக டெல்லிக்கு வருமாறு அவர் அழைக்கப்பட்டார். அது தமிழக அரசுக்கு மிகப் பெரிய அப கீர்த்தியனாது. அவசரப்பட்டுவிட்ட காவல்துறையினரார் தமிழக அரசு தலை குனிய வேண்டியதாயிற்று.

'' நான் ஜெகநாதனை அவசரமாய்ப் பார்க்க வேண்டும் '' என்றார் எம்.ஜி.ஆர். ' மனதால் அவர் காயப்பட்டுப் போனார் ' என்கிறார்கள். முதல்வரின் செய்தி ஜெகநாதனை அடைந்தபோது அவர் டெல்லிக்குப் போகும் கடைசி நிமிடப் பயணத்தில் இருந்தார். இன்னொரு அதிர்ச்சியான செய்தியையும் அவர் சொன்னார். '' மாவட்டக் காவல்துறை அதிகாரியின் உத்தரவுப்படியே நான் தாக்கப் பட்டேன். என்னிடம் படித்த மாணவனே அந்த அதிகாரி '' என்றார் அவர். இச்செய்தி முதல்வருக்குப் போனது.

ஜெகநாதன் டெல்லியிலிருந்து திரும்பிய மறுநாள் ஆர்க்காடு முதலி சாலை நோக்கிய பயணம் நடந்தது. எம்.ஜி.ஆர் இல்லத்தின் முன்னே ஒரு வித்தியாசமான ஒரு காட்சியை அவர் கண்டார். திகைத்தார். தர்மபுரியில் யார்யார் எல்லாம் அவரைத் தாக்கினார்களோ அவர்கள் வரிசையாக தலைகுனிந்தபடி நின்றிருந்தார்கள். படியேறி முதல்வரின் அறைக்குள் நுழைந்தார். எம்.ஜி.ஆர் எழுந்துநின்று நகர்ந்து வந்து, அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு குற்ற உணர்வோடு குறுகிப்போய் நின்றார். '' நீங்கள் நக்சலைட் பிரச்சனையை சட்ட ஒழுங்குப் பிரச்சனையாகப் பார்க்கிறீர்கள். சமூகப் பிரச்சனையாகப் பாருங்கள். படித்த இளைஞர்களுக்கு வேலை இல்லை. உழைக்கும் மக்களுக்கு போதிய கூலி இல்லை. எனவே இளைஞர்கள் விரக்தியின் விளிம்பில் நிற்கிறார்கள் '' என்று ஜெகநாதன் சொற்கள் வெளிவந்தன. அது ஆதங்கமாகவுமிருந்தன. கீழே நிற்கும் காவல்துறையினர் பெயர்களையும், விபரங்களையும் அவர்கள் குற்றங்களையும் விமர்சித்து விட்டு; என்ன தண்டனை கொடுக்கப் போகிறீர்கள்? என்றார் ஜெகநாதன். '' ஐயா ! அந்தக் காவலர்களுக்குத் தண்டனை தருவேன். நீங்களே நீதிபதி. என்ன தண்டனை அவர்களுக்கு வழங்க வேண்டுமோ அதைக்கூறுங்கள். தயவு செய்து தீர்ப்புச் சொல்லுங்கள்! நிச்சயமாக நீங்கள் தீர்க்கும் தண்டனையை ஏற்றுக் கொள்வேன். என்னை ஒரு குற்றவாளியாகப் பார்க்காதீர்கள் '' என்றார் எம்.ஜி.ஆர் நாத்தழுதழுக்க

எம்.ஜி.ஆரை நேருக்கு நேர் நிமிர்ந்து ஏறிட்டுப் பார்த்த ஜெகநாதன், சில விநாடிகள் பார்த்துக் கொண்டே இருந்தார். முதல்வர் முகம் களை இழந்து இருப்பதை அவர் நன்றாக அவதானித்தார். அடுத்து அவர் சொன்னது எம்.ஜி.ஆரை மாத்திரமல்ல, கூடிநின்ற அனை வரையுமே அதிர வைத்தது. அந்த தேவமைந்தன் அளித்த தீர்ப்பு இது. '' அவர்களை மன்னித்து விடுவோம். ''

இருக்கையை விட்டு எழுந்து நின்ற முதல்வரின் கண்களில் நீர் கோர்த்துநின்றது. ஜெகநாதனின் இரண்டு கைகளையும் எடுத்து தன் கண்களில் ஒற்றிக்கொண்டார். இந்த சந்திப்புக்குப்பின் அந்த மாவட்டங்களில் துப்பாக்கிகள் முழங்கவேயில்லை. தனித்தனியாக திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. '' சிறியவர் செய்த சிறுபிழைக்காக தண்டித்தவரை ஒரு பொருட்டாக யாரும் மதிப்பதில்லை. பெருந் தன்மையுடன் பொறுத்துக் கொண்ட வரை பொன்னைப் பொதித்து வைத்துக் கொள்வதுபோல் உலகம் நோக்கும் '' என்கிறார் வள்ளுவர்.

'' ஒறுத்தாரை பொன்றாக வையாரே
வைப்பர்
பொறுத்தாரை பொன்போற் பொதிந்து ''
(குறள் : 155)

– கோத்திரன்


Jk Gold House &
Fashion House
314-316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677

Diamonds Palace

76 Tooting High Street London SW17 ORN
Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814

Mithus Jewellery

322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792